463

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 APR 1957

463
2-57

REGISTERED No. M. 6165. ந. பை. 13

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

மே 1957.

விஷயம்.	பக்கம்.
ஐக்கிய வாழ்வே இஸ்லாமிய லக்ஷியம்	1
ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள்	7
சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர்	15
திருக் குர்ஆன் சார சங்கிரஹம் (ரஹ்மத் பாகவி)	21
பண்டைக்கால முஸ்லிம்களின் நிலைமை (எஸ். எம். முஹம்மது முஸ்தபா ஆலூரிய்யி)	26
உடல் அமைப்பின் தத்துவம் (சிறுவர் பகுதி) (T. F. R. மஆலி ஸாஹிபு-பாகவி)	28

... இஸ்லாம் ஆபீஸ் :
...ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

JL
இஸ்லாம், பத்ஹுல்
1957
187062

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா ரூ. 1–50

தனிப் பிரதி நயா பைஸா. 13

மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

ஹஜ்ரத் காஜா ஜுனைத்துல் பக்தாதி

றலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஜீவிய சரித்திரம்.

அரும் பெரும் மெஞ்ஞான தத்துவங்களான தஸவ்வுப் தக்வா இபாதத், உபவாசம் என்ற இற்பானுடைய துறையில் துலங்கி விளங்கும் ஹஜ்றத் காஜா ஜுனைதுல் பக்தாதி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் அரிய ஜீவிய சரித்திரத்தைப் பார்க்க நம் நேயர்களில் அனைவரும் அளவிறந்த ஊக்கங் கொண்டிருக்கலாம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஹஜ்ரத் அவர்களின் உஸ்தாதாகிய ஹஜ்றத் சரீயிஸ்ஸிக்தி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் அரிய மெஞ்ஞான உபதேசங்களை ஏற்று நடக்தொழுகிய ஹஜ்றத் காஜா ஜுனைத் அவர்கள் உலக மெஞ்ஞானிகளுக்கோர் வழி காட்டிய தீபத்தைப் போலாவார். தமது திவ்விய உபதேசங்களினால் அந்தகாரத்தை தவிர்த்து மெஞ்ஞான ஒளிவீச செய்திருக்கிறார். தஸவ்வுபின் அபேக்ஷகர்கள் இவ்வரிய நூலை வாங்கி வாசித்து அம்மகானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடத்தல் அவசியம். கிளேஸ் காகிதம் விலை ரூ. 1–28

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ், 5.

463
2-77

الإسلام

பத்ஹுல் இஸ்லாம்

மே—1957.

ஐக்கிய வாழ்வே இஸ்லாமிய லக்ஷியம்

அணுசக்தியைப் பற்றி இக்காலே உலகமெங்கும் பேசப் படுகிறது. அணுசக்தியே 'மகா மகா மகா சக்தி' என்று சொல்லப் படுகிறது. அது உண்மையாக இருக்கலாம்; மேலும் உண்மையாகவே இருக்கிறது. எப்படி என்பதை சிறிது ஆராய்வோம்:

"மய் யஃமல் மிஸ்கால தர்ரதின் கைரன் யரஹு;
வமய் யஃமல் மிஸ்கால தர்ரத்தின் ஷர்ரய் யரஹு"

என்று திருக் குர்ஆனில் அனுதினமும் ஓதுகின்றோமே அந்த ஆயத்தின் கருத்தையும் தத்துவத்தையும் நாம் உய்த்துணர்ந்து பார்க்கின்றோமா? "ஒருவன் ஓர் 'அணு' அத்துணை நன்மை செய்வானுயின் அதை அவன் அனுபவிப்பான்; மேலும் ஒருவன் ஓர் அணு அத்துணை தீமை செய்வானுயின் அதையும் அவன் அனுபவிப்பான்" என்பது இந்த ஆயத்தின் வெளிப்பொருள். "நல்ல காரியம் செய்தால் மறுமையில் புண்ணியம் கிடைக்கும், தீய காரியம் செய்தால் மறுமையில் வேதனை கிடைக்கும்" என்பது தாத்பரிய உரை.

இதில் 'தர்ரத்தின்' என்ற சொல்லுக்கு 'அணு—அத்தனை' என்று பொருள் செய்கின்றோம். 'அணு' என்றால் எவ்வளவு? எத்தனைப் பெரியது? எத்தனைச் சிறியது? என்பது மனிதனுல் வரையறுத்துச் சொல்லமுடியாது. அது ஆண்டவன் ஒருவனுக்கே தெரியும்.

இப்போது அமெரிக்காவிலும் ரஷியாவிலும், மற்றும் மேல் நாடுகளிலும் அணு சக்தி இயக்க ஆராய்ச்சி நடைபெறுகிறதே அந்த அணு எப்படிப்பட்டது, எவ்வளவு ப்ருமனுடையது, எவ்வளவு

சிறியது என்பதை அந்த விஞ்ஞானிகளாலேயே சரிவர எடுத்துச் சொல்ல முடியவில்லை. ஓர் எலிமிச்சம்பழம் அளவு பருமனுள்ள அணுக்கதிர் இயக்க மூலப்பொருளைக் கொண்டு, பல்லாயிரம் டன் எடையுள்ள மிகப் பெரும் கப்பலை செலுத்தி, அதி வேகமாக சமுத்திரங்களைக் கடந்து, இந்த உலகத்தையே மூன்று முறை சுற்றிவந்து விடப்போதுமான சக்தி (பவர்) அதனுள் அடங்கி யிருக்கிற தென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மோட்டார், ரயில், எஞ்சின், இயந்திரம் எல்லாவற்றையுமே அணுசக்தியைக் கொண்டு இயக்கமுடியும் என்றும் விஞ்ஞானிகள் கூறிவருகிறார்கள்.

இஸ்லாமிய சகோதரீர்! இங்கு அணுசக்தியைப் பற்றி ஆராய்ச்சி செய்வது நம்முடைய நோக்கமில்லை. பல அணுக்கள் சேர்ந்தால் மகாப் பெரும் சக்தி உண்டாகிறதென்பதை இஸ்லாமிய போதனை ரீதியாய் எடுத்துக் கூறுவதே நமது நோக்கமாகும். அதாவது ஐக்கிய சக்தி எனப்படும் ஒற்றுமையின் மிகப் பிரயோஜனத்தைப் பற்றியே இங்கு நாம் விஷய விளக்கம் செய்யப்போகிறோம்.

உலகில் அனுபவ ரீதியாக நாம் எதை எடுத்துக்கொண்டபோதி லும், தனிப் பொருள்—கூட்டுப் பொருள் என்று இரண்டு வகை களைக் காணுகின்றோம். ஒரு பொருள் தனியாக இருந்தால் அது சுயமே சக்தியற்றதைப் போல் காணப்படுகிறது. ஆனால் அந்த மாதிரி தனிப்பொருள்கள் பல ஒன்று சேர்ந்து ஐக்கியத்தினால் சேர்க் கப்படும்போது, அதிலிருந்து ஒரு பெரிய சக்தி உதயமாகின்றது. இந்த ஐக்கிய சக்தியென்னும் ஒன்றுபட்ட பலத்தை—கட்டுக் கோப்பை கொண்டு, உலகத்தில் பலப்பல காரியங்களையும் சாதிக்கலாம். இதற்கு ஒன்றிரண்டல்ல, நூற்றுக்கணக்கான உதாரணங்களைக் கூறலாம்.

பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு உபாத்தியாயர்கள் ஒருபாடம் சொல்லிக் கொடுப்பார்கள். அதாவது:—ஒரு கிழத்தந்தைக்கு பல புத்திரர்கள் இருந்தனர். ஆனால் அவர்கள் ஒன்று சேர்ந்து எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. தனித்தனியே போய் ஏதேதோ செய்து கெட்டலைந்து, நேரத்தையும் பணத்தையும் செலவழிப்பார்கள். கூட் டாக வாழும்படியும் எக்காரியத்தையும் சேர்ந்து செய்யும்படியும், தகப்ப னார் அந்தப் பிள்ளைகளுக்கு பலப்பல வகையில் சொல்லிப்பார்த்தார். அந்த பேதைப் பிள்ளைகளுக்கு விஷயம் புரியவில்லை. ஒருநாள் தந்தை ஒரு விறகு சுள்ளிக் கட்டை வாங்கி வந்து வீட்டில் வைத்துக் கொண்

18062

டார். பிள்ளைகள் வந்ததும் அவர்களைக் கூப்பிட்டு, 'உங்களில் ஒவ்வொருவரும் முயன்று இந்த விறகு சுள்ளிக் கட்டையை முழங்காலில் வைத்து உடைத்துப் போடுங்கள் பார்ப்போம்' என்றார். அங்ஙனமே ஒவ்வொருவரும் அந்த கட்டை உடைத்து முறித்துப் போட எவ்வளவோ முயன்றனர். முடியவே இல்லை. முயன்று முயன்று எல்லோரும் சோர்ந்து உட்கார்ந்து விட்டனர். பிறகு தகப்பனார் எழுந்து கட்டு மீது கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்த்து எறிந்து விட்டு 'இப்போது இந்த விறகுகளை உடைத்துப் பாருங்கள், என்றார். ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு விறகுக் கழியை எடுத்து இரு கரங்களாலேயே வளைத்து உடைத்துப் போட்டு விட்டனர்.

"பிள்ளைகளே! இதிலிருந்து நீங்கள் என்ன பாடம் கற்றுக் கொண்டீர்கள்? விறகுச் சுள்ளிகள் பலமற்ற-உறுதியில்லாத அற்பப் பொருள். அதை இரண்டு விரல்களாலே முறித்துப் போடலாம். ஆனால் அவைகள் பல சேர்ந்து ஒரு கயிற்றின் பிணைப்பால் ஒன்று சேர்ந்து ஒரு 'கட்டாக' ஆன பின்பு, அதை அப்படியே முறித்து உடைத்துப் போடுவதென்பது யாராலும் முடியாது. இதுதான் ஒற்றுமையின் பலன்; இதுதான் ஐக்கிய சக்தியின் பிரயோஜனம். இவ்வாறே ஒரு குடும்பத்துத் தனித்தனி நபர்களாகிய நீங்களெல்லாரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக இருந்தால், உங்களை எந்த அன்னியனாலும், எந்த விரோதியாலும் அசைத்துவிட முடியாது; ஒன்றும் செய்துவிட முடியாது; உங்களை ஜெயிக்க யாராலும் இயலாது. 'ஒன்றுபட்ட செயலே உறுதிபெற்ற வாழ்வு".

இது அந்தத் தகப்பனார், தம்குடும்பமாகிய பிள்ளைகளுக்குச் செய்த உபதேசம். இதேமாதிரிதான் முஸ்லிம் சமூக மக்களாகிய நம்மெல்லா உம்மத்துமார்களுக்கும், நம் இஸ்லாமிய இகபர ஆத்மத் தந்தையாகிய நபிகள் பெருமானார் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "முஸ்லிம்களே! நீங்கள் இஸ்லாம் என்னும் வடக்கயிற்றை ஒற்றுமையாய்-பலமாக பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்" என்று திரு உபதேசம் செய்தருளி யுள்ளார்கள்.

இக்காலை பொதுவாக இஸ்லாமிய உலக முஸ்லிம் தேச மக்களுக்கும், குறிப்பாக இந்திய முஸ்லிம் சமுதாயத்தினர்க்கும் ஒரு நெருக்கடியான சமயம் நேர்ந்திருக்கிறது. அழிவு சக்திகள், நம் சமூகத்தை பல திக்குகளிலிருந்தும் தாக்குவதற்குத் தயாராய் காத்துக்

கொண்டிருக்கின்றன. சமுதாய வாழ்விலும், சம்பிரதாய போக்கிலும், பொருளாதார ரீதியிலும், அரசியல் துறையிலும் நாம் ஹீன தசையில் இருந்து வருகின்றோம். இஞ்ஞான்று மத, சமூக, பொருளாதார, ஜீவிய, அரசியல் துறை யாவற்றினுமே நாம், மிக மிக ஒற்றுமையாய்—ஒன்றுபட்டு—ஒரே குரல் எழுப்பி, ஒரேமாதிரி வாழ வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது.

பல நூறு இரும்பு வளையங்கள் பின்னிக் கோக்கப்பட்டது ஒரு சங்கிலியாகும். தனித்தனியே கிடக்கும் வளையங்களை வீசி எறிந்து சிதற அடித்து விடலாம். ஒன்றோடொன்று கோத்து பிணைத்து சங்கிலித் தொடரான பிறகு, அந்தச் சங்கிலியை அறுப்பதற்கு யாராலும் முடிவதில்லை. கழுத்தில் அணியும் மெல்லிய தங்கச் சங்கிலி கூட எவ்வளவோ வலிமையுடையதாய் விடுகிறது.

இங்ஙனம், தனிநபர் முஸ்லிம்கள் ஒருவரோடொருவர் இணைந்து ஏற்படுத்திக் கொள்ளும் கட்டுப்பாடே, சமூகச் சங்கிலி எனப்படும். இதையே திருக்குர்ஆன் "வஃதஸிமூ பிஹப்லில்லாஹி ஜமீஆ" (அல்லாஹ்வுடைய சங்கிலியை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்) என்று நமக்கு நற்போதனை செய்கிறது.

சிறு இரும்பு வளையங்களாலாகும் ஒரு சங்கிலியை, பஹில்வான் என்னும் சாண்டோ அறுத்து எறிந்து விடுகிறான்; பெரு வளையங்களாகும் ஒரு சங்கிலியை யானை அறுத்துக் கொண்டுபோய் விடுகிறது. ஆனால் ஹப்லுல்லாஹ் என்னும் அல்லாஹ்வுடைய சங்கிலியை, எந்த மாந்தனாலும் எந்த மிருகத்தாலும் அறுத்தெறிவது முடியாது. அதாவது இஸ்லாத்தின் பெயரால், முஸ்லிம்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகி, ஐக்கிய வாழ்வில் ஒரே துறையில் ஒற்றுமை யடைந்து விட்டால், உலகத்தில் எந்த சக்தியாலும், எந்த விரோதிக் கூட்டத்தாலும் நம் முஸ்லிம்சமூகத்தை அசைத்துவிட முடியாது.

அல்லாஹு தஆலா, திருமறையாம் தன் திருக் குர்ஆனில் மற்றோரிடத்தில் கூறுவதாவது :—

"(இஸ்லாம் உதயமான காலத்தில், முஸ்லிம்களே,) நீங்கள், ஒருவர்க்கொருவர் பகைவர்களாய்க் கிடந்தீர்கள்; அப்போது இறைவன் உங்கள் ஹிருதயங்களிலே (ஈமான் என்னும்) பிரியத்தை (பற்றை) உண்டாக்கி வைத்தான்; இதனால் நீங்கள் ஆண்டவனின் அருளால், தமக்குள் சகோதரர்களாய் விட்டீர்கள். (முஸ்லிம்களே!) அல்லாஹு

(தஆலா) உடைய அந்த அருட்பாக்கியத்தை (நிஃமத்தை) நினைத்துப் பாருங்கள்" (ஜுஸ்உ 4; ருகூஉ-2)

பண்டைக்காலத்தில், இஸ்லாமிய பிரசாரம் ஆரம்பமாவதற்கு முன், அரபியர்கள் சமூகக் கட்டுப்பாடோ, சன்மார்க்க சம்பிரதாயமோ, நற்குண நல்லொழுக்கமோ இன்றி கெட்டுப்போய், தமக்குள் பகைமை பாராட்டிக் கொண்டும் சதா சண்டைச் சச்சரவுகள் புரிந்து கொண்டும் தலைமுறைத் தலைமுறையாய் யுத்தம் தொடுத்து அழிந்து கொண்டும் இருந்தனர். ரஹ்மத்துன் லில்ஆலமீனாகிய லோக தயாளர் நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், அவ்வரபு மக்களை சுத்த சத்திய தீனுல் இஸ்லாத்தில் அழைத்து, அதை அவர்கள் ஏற்று முஸ்லிமான பின்னர், ஒற்றுமையாக வாழத் தொடங்கிவிட்டனர்; இஸ்லாத்திற்காக தியாகங்கள் புரியவும் முன் வந்து விட்டார்கள். தான்பெற்ற ஈமானுடைய இன்பத்தை இவ்வுலக மெல்லாம் பெறவேண்டும் என்பதற்காக, அவர்கள் ஐக்கியப்பட்டு இஸ்லாமிய முஜாஹிதுகளாகவும் சத்தியப் போர்வீரர்களாகவும் சேர்ந்து,இஸ்லாத்தை அரபு அல்லாத பிறநாடுகளிலும் பரத்த ஜிஹாது புரியவும் தொடங்கிவிட்டார்கள். முஸ்லிம்கள் அல்லாஹ்வுடைய வடக் கயிற்றை பற்றிப் பிடித்துக் கொண்டு ஒன்றுபட்டு முயன்றதால், அதிக எளிதில் தேசாதேசங்களை கைப்பற்றி, இஸ்லாமிய சத்திய ஜோதியை எங்கணும் பரத்தி, சொற்ப காலத்திலேயே உலகத்திலேயே சிறந்த சமூகமாய் விளங்கி விட்டார்கள். அல்ஹம்து லில்லாஹ்!

இஸ்லாத்திற்கு அக்காலத்தில் வெகு எளிதில் வெற்றிக்குமேல் வெற்றிகிடைத்துவந்தது; பர்ஷியா தேச பாதுஷாக்களும், எகிப்து தேச ஏகாதிபதிகளும், ரோம் தேச சக்கிரவர்த்திகளும், ஐரோப்பிய நாட்டு அரசர்களும் முஸ்லிம்களுக்கு அஞ்சிப் பணிந்து வழிபட்டுக் கொண்டிருந்தனர். திருநபியின் தோழர்களாகிய ஸஹாபாக்கள் இஸ்லாமியத் தூதர் என்ற பெயர் மட்டும் தாங்கி, கிழிந்த உடையோடு, ஏழ்மைக் கோலத்துடனேயே ஏகாதிபத்தியம் புரியும் அயல் நாட்டு அரசர்கள் முன் சென்றால், வணங்காமுடி மன்னர்களான அவ்வேந்தர்கள், இவ்வேழை முஸ்லிம்களுக்கு மரியாதை செய்து வரவேற்று, சரி ஆசனம் தந்து கௌரவித்து, ஸ்நேகம் கொள்ள முற்படுவார்கள். பின்னர், கலீபாக்கள் காலத்திலும் முஸ்லிம்களிடையே ஒற்றுமையும் கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிலைத்திருந்த காலம் வரை, இந்தக் கீர்த்தியும்

கண்ணியமும் வெற்றிகளும், இஸ்லாமிய சமூகத்துக்கு குறையில்லாமல் இருந்து வந்தன.

ஆனால் அதன் பிறகு, இஸ்லாமிய குணஒழுக்க சீலத்தை கைவிட்ட பிறகுதான், பிற்கால முஸ்லிம் ராஜ்யங்களில் சிதைவும் சீர்கேடும் ஏற்பட்டு, அன்னியர்களின் ஆதிக்கம் தலையோங்கத் தொடங்கியது.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், இஸ்லாமிய சமூகத்தை ஒரு கற்கோட்டைக்கு, அல்லது உறுதியான செங்கற் கட்டிடத்துக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். மேலும், ஒவ்வொரு முஸ்லிமையும் அந்தக் கட்டிடத்துக் கற்பாளத்துக்கும் செங்கல்லுக்கும் உதாரணம் கூறியிருக்கிறார்கள்.

"ஒரு மூமின் இன்னொரு மூமினுக்கு கட்டிட உறுப்புக்களைப் போலாவர்; அவை ஒன்றையொன்றை நெருங்கி இணைத்து (கட்டிடத்தை) உறுதிப்படுத்துகின்றன" என்று நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்து மொழிந்து விட்டு, தங்கள் இருகரங்களின் ஐவைந்து விரல்களையும் ஒன்று கோத்து உறுதிப் பிடிப்பாக்கி, "முஸ்லிம்கள் இப்படி சேர்ந்து வாழவேண்டும்" என்று, கூறி உபமானம் காட்டினார்கள். ஆஹா!

காலம் வெகு தூரம் முன்னேறி விட்டது. அப்பண்டைய காலத்துக்கும் இந்த அணுகுண்டு காலத்துக்கு மிடையில் 1376 வருஷங்கள் கடந்து விட்டன. முஸ்லிம்கள், தங்கள் ஈமான் மீதும் குர்ஆன் மீதும் ஹதீது மீதும் நிலைத்தே இருந்து வருகிறார்கள். முஸ்லிம்கள், திருக்குர்ஆனை தங்கள் இகபர வழிகாட்டியாய்க் கருதி ஒழுகிவரும் வரை ஒருபோதும் க்ஷீணித்துப் போகமாட்டார்கள். முஸ்லிம் சமூகத்துக்கு குர்ஆன்—ஹதீது போதனைகள் ஒரு 'ரஹ்மத்' என்னும் அருட்பாக்கியமாகும்.

முஸ்லிம் சோதரீர்! ஒரு சிறு அணு மூலப் பொருளுக்குள் கோடிக்கணக்கான அணுத் துணுக்குகள் ஒன்று சேர்ந்து ஐக்கியப்பட்டு, இறுகி இணைந்து பெரும் சக்திப் புயலாய் கிளம்பி, ஆக்கவேலை செய்வதைப்போல், முஸ்லிம்களாகிய நாம், ஐக்கியப்பட்டு ஒற்றுமையாய் இருந்து இஸ்லாத்தின் அபிவிருத்திக்கும், முஸ்லிம் சமுதாய நற்காரியங்களுக்கும் நல்ல சேவை செய்வோமாக! இதற்குரிய ஆத்மார்த்த சக்தியை நம்மெல்லோருக்கும் எல்லாம் வல்ல இறைவன் தந்தருள்வானாக. ஆமீன், யாரப்பல் ஆலமீன்.

ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள்.

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

4-வது பகுதி.

யஹ்யா பின் முயீனுக்கு நேர்ந்த சம்பவம்

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களிடம் அபார நம்பிக்கை வைத்திருந்தவர்களில் யஹ்யா பின் முயீன் மிகவும் முக்கியமானவர். இவர் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிவரும் புனித நோக்கத்தோடு, பக்தாத் நகரை விட்டு, ஹிஜாஸ் தேசம் நோக்கிப் புறப்பட்டார்கள். முதலில் மதீனா முனவ்வரா நகர்ப் போய்ச் சேர்ந்தார்கள். இங்கு சில நாள் தங்கி, ஜியாரத்து முதலியன செய்து முடித்தார்கள்.

பிறகு அவர்கள், மதீனாவை விட்டு அல்லாஹ்வின் புனித இல்லமாகிய கஃபத்துல்லாஹ்வுடைய ஜியாரத்தை நாடி, மக்கா முகர்ரமாவுக்குப் புறப்பட்டார்கள். அங்கும் பிரயாணம் போகும்போது, முதலாவது மன்ஜிலிலே சயனித்துக் கொண்டிருக்கும் போது, ஒரு சுப சொர்ப்பனம் கண்டார்கள். அந்தக் கனவில் "ஏ! அபூ ஜக்ரிய்யாவே, என்னுடைய நட்புறவை-என் சமூகத்தை-விட்டு எங்கே விரண்டோடுகிறீர்? என்னிடமே இருப்பீராக" என்று ஓர் அசரீரி வாக்கு அவர் காதில் திண்ணமாய் தொனித்தது.

யஹ்யா பின் முயீன், நித்திரை கலைந்து எழுந்து உட்கார்ந்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். பிரயாணத்தில் கூட்டாளிகளாக இருந்த தம் தோழர்களை அழைத்து, "எனக்கு பரிசுத்த ஆத்மாவிடமிருந்து உத்தரவு வந்து விட்டது. நான் உங்களோடு வர முடியாது. நான் இங்கிருந்து திரும்பி, புனித மதீனாவுக்குச் செல்ல வேண்டும்" என்று சொல்லி அனுப்பி விட்டு, திரும்ப திருநபியின் ரவ்லாவுக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

இங்ஙனம், யஹ்யா பின் முஈன், மதீனா முனவ்வராவுக்கு திரும்பி வந்து சேர்ந்த 3-வது நாள் 'மவுத்' எனும் பானத்தை ஏற்றுக் கொண்டு பருகி, இறந்து போனார்கள். ஜன்னத்துல் பகீஃ என்னும் மதீனா பள்ளித் தோட்டத்திலேயே-கப்ரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். மவுத்தாகும்போது அவர்கட்கு வயது 75.

இப்படிப்பட்டவராகிய உத்தமரும், முஹத்திஸுமாகிய யஹ்யா பின் முஈன், நமது இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களிடம், ஹதீதுடைய

இல்மை கற்று, மெய்யான ஸஹீஹ் ஹதீதுகளை தேர்ந்து எடுப்பார்கள். இவ்விஷயங்களில் இமாம் அஹ்மத் பின் ஹன்பலுக்கு உடந்தையாக இருந்து வந்துள்ளார்கள்.

சில பெரியோரின் புகழுரைகள்

(1) ஹஸன் பின் முஹம்மத் ஜஃபரானி என்ற பெரியார் ரிவாயத்து செய்வதாவது :—

நான், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய திருச்சமுகத்துக்குப் போகும்போதெல்லாம், அங்கு இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் விஜயமாய் இருந்து, ஹதீதுக் கல்வி ஞான ஆராய்ச்சி பெற்றுக் கொண்டிருப்பதையே காண்பேன். பலமுறை இவர்கள், தொழுது முடித்துவிட்டு இமாம் ஷாபிஈ (ரஹ்) வுடைய நன்மைக்காகவும் ஜீவியத்துக்காகவும் துஆ கேட்பதைக் கண்டுள்ளேன்.

(2) ஸுப்யான் பின் ஐனைஹி என்ற பெரியாரும், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் கலாமேதையை மிகவும் பாராட்டுகிறவர்களாகவும், அவர்கள் பெருமையை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்பவர்களாகவும் இருந்து வந்தார்கள். பொது மக்களில் யாரேனும் வந்து, இஸ்லாமிய சட்ட திட்டங்களை யொட்டிய ஏதேனும் மஸ்அலாவோ, திருகுர்ஆன் ஆயத்துக்கு தப்ஸீர் என்னும் விளக்கமோ, அல்லது பத்வா என்னும் மார்க்கத் தீர்ப்போ கேட்க வந்தால், தாம் பெரிய அறிவாளியாக (ஆலிமாக) இருந்தும், வந்தவர்களுக்கு சுயமே பதில் சொல்லி அனுப்பாமல், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டி, "அதோ, ஒரு நல்லடியார் உட்கார்ந்திருக்கிறாரே, அவரிடமே போய் கேட்டுத் தெரிந்துக் கொள்ளுங்கள்; இதற்குத் தகுதி வாய்ந்தவர் அவர்தான்" என்று கூறுவார்கள்.

(3) இப்னுத் தவ்பா பக்தாதி என்ற பெரியார் ரிவாயத்து கூறுவதாவது :—

ஒருமுறை நான், திருமக்காவின் மஸ்ஜிதுல் ஹராமில் (கஃபா பள்ளியை யடுத்து) இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்களைக் கண்டேன். இவர்கள், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள்முன் மண்டியிட்டு மிக மரியாதையாக உட்கார்ந்து, போதனைப் பாடத்திற்காக காத்துக் கொண்டிருந்தார்கள். வேறு எந்த அறிவாளிகள் வந்து அங்கு போதனை (வஃலு) செய்தாலும், சமுகத்தை விட்டு எழுந்துப் போகாதவர்களாய் அத்தனை பயபக்தியோடு இருப்பார்கள்.

(4) ஹஜ்ரத் அபூமுஹம்மத் என்பார், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய சகோதரியின் மைந்தராவர். இப்பெரியார், இமாம் ஷாபிஈ அவர்களைப்பற்றி ரிவாயத்து அறிவிப்பதாவது :—

"எனது மாமா, இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், இரவு நேரங்களில், நடு நிசியிலும் எழுந்து, வேலைக்காரியை கூவி அழைத்து,

'விளக்கை பொருத்திக் கொண்டுவா' என்று சொல்வார்கள். அவள் கொண்டு வருவாள். இமாம் அவர்கள் விளக்கொளியில் அமர்ந்து வெகுநேரம் விழித்து கிதாபுகளை ஆராய்ச்சி செய்து கொண்டும், மஸ் அலாக்களை எழுதிக் கொண்டும் இருப்பார்கள். வேலைக்காரி தூங்கி விடுவாள். வெகுநேரம் கழித்து, மீண்டும் வேலைக்காரியை கூப்பிட்டு அழைத்து, "இந்த விளக்கை எடுத்துப்போ" என்று சொல்லிவிட்டு, இருட்டில் அமர்ந்து விடிய விடிய ஸுப்ஹு நேரம் வரை அவ்ராது, வஸீபாக்கள் ஓதுவதில் ஈடுபட்டிருப்பார்கள்.

பகலெல்லாம், இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களுக்காக சேவை செய்வதிலும், இரவில் பெரும் பகுதிநேரம் விழித்திருந்து அல்லாஹ்வை தியானிப்பதிலும் இமாம் ஷாபிஈ (ரஹ்) வுடைய ஜீவியம் கழிந்து வந்தது.

இமாம் ஷாபிஈயின் சில சீரிய போதனைகள்.

(1) "அவ்லியாக்களின் இலக்ஷணம் என்ன? எப்படிப்பட்டவர் அல்லாஹ்வுடைய நல்லடியாக இருப்பார்?" என்று ஹஜ்ரத் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்டது.

அதற்கு இமாம் ஷாபிஈ(ரஹ்)கூறிய அரிய மறுமொழியாவது:-

"அவ்லியா அல்லாஹ் எனப்படுவர், தக்க மார்க்கக் கல்வி என்னும் 'இல்மு' இல்லாதவராயின், அப்படிப்பட்டவர் கியாமத்துநாளில் 'வலீ' யாக(அல்லாஹ்வுடைய நண்பராக) எழுப்பப்படமாட்டார். ஏனெனின், எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, படிப்பில்லாத மூடனைத் தன்னுடைய நண்பனாக ஏற்றுக்கொள்ள மாட்டான்" என்பதாகும்.

(2) கலீபா ஹாரூன் ரஷீத், ஒருசமயம் ஹஜ்ரத் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களை யணுகி "ஹஜ்ரத், தாங்கள் எப்போது அதிகாலையிலேயே, சீக்கிரமாக, காலை ஆகாரம் (நாஷ்தா) செய்து முடித்துக் கொள்கிறீர்களே, இதில் ஏதேனும் தத்துவம் இருக்க வேண்டும் என்று பிரதானிகள் என்னிடம் பிரஸ்தாபித்தனர்: தயவு செய்து இதன் தத்துவார்த்தத்தை தாங்கள் எனக்குச் சொல்லுங்கள்" என்று வேண்டிக்கொண்டார்.

அதற்கு இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் திருவுளமானதாவது:- 'லுக்மத்துஸ் ஸபாஹ் கைரும் மின் அல்பிதவாஃ' (அதிகாலை ஆகாரமானது, ஆயிரம் மருந்துகளைவிட சிரேஷ்டமானதாகும்). மேலும் அதிகாலைநேரம் மனதுக்கு மிகவும் குதூகலமான நேரமாகும். அப்போது அங்கமெல்லாம் நிம்மதியாய் இருக்கின்றன: குடிக்கும் தண்ணீர் சூடு ஏறுமல் குளிர்ந்திருக்கிறது. காற்றும் குளிர்ச்சியாய் மனோ உல்லாஸத்தை தந்து கொண்டிருக்கிறது. ஈக்களும் காலை நேரத்தில்

அதிகம் மொய்ப்பதில்லை. ஆதலின், காலை நேரம் சிறந்த நேரமாகும்" என்பதாகும்.

(ஆஹா! என்ன அருந் தத்துவம். என்ன ஆரோக்கிய அர்த்தம்; சுப்ஹானல்லாஹ்!)

(3) இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், பொதுவாக ஆலிம்களுக்கு இருக்க வேண்டிய சிறப்பு—குணப் பண்பு பற்றி கூறுவதாவது:—

"ஆலிம் உலமாக்களுக்கு அழகு தரும் ஆபரணம்—தன்னடக்கமும், போது மென்ற தன்மையும்தான். 'கிறுஅத்' என்பது ஆலிம்களின் அருங்குணம்; ஏழ்மையிலும் வறுமையிலும் வாடிக்கிடக்க நேரிட்டபோதிலும், ஆலிம்கள் பொறுமைக் குணத்தை கைவிடக் கூடாது. இங்ஙனம் பக்ர் என்னும் ஏழ்மையும், கிறுஅத் என்னும் தன்னடக்கமும் உடையவர்களை ஆண்டவன் நேசிக்கிறுன்" என்பதாகும்.

(4) "ஏழ்மைத் தனம் ஆலிம் உலமாக்களின் தனிப் பெரும் சிறப்பாகும்; அது ஆண்டவன் அவர்களுக்குப் புரியும் அருட் பாக்கியமாகும். கஷ்டத்தை அறிவாளிகள் பொறுத்துக் கொண்டு, அல்லாஹ்வுக்கு ஷுக்ரு செய்வார்கள்; ஆனால் மூடர்கள் கஷ்டத்துக்குப் பயந்து, பதறி இறைவனைக் குறை கூறுவார்கள்" என்று இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், ஒரு சமயம் திரு உபதேசம் செய்தருளினர்கள்.

இமாம் ஷாபி (ரஹ்) அவர்களும் பல காலம் வறுமையிலும் மிடுமையிலும் கஷ்டப்பட்டு வாழ்ந்து வந்தார்கள். அப்படிப்பட்ட கஷ்டங்களை ஆண்டவனின் புறத்திலிருந்து உண்டாகும் சோதனை என்று நினைத்து, ஸப்ரு செய்வார்கள்.

10-வது பதிப்பு வெளி வந்துவிட்டது.

சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன !!!

இநத கிதாபின் மஹிமையைப்பற்றி நாம் அதிகமாய் எழுதவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில், இது ஜனுப காதிப் முஹம்மத் யாஸீன் சாயபு அவர்களால் கோர்வை செயயபபட்டு எல்லா தேசங்களிலும் பரவி பிரசிதத மாகி இதுவரையில் லக்ஷக்கணக்கான முஸ்லீம்களும் நவ முஸ்லீம்களும் தொழுகையை பற்றியும் மார்க்கவிஷயஙகளும் தமிழிலேயே தனக்குததாளுக இலேசில் கற்றுக்கொண்டு தொழுவாளிகளாய் விட்டார்கள்.

அறபு, பார்ஸீ, உர்து, படிபபுகள் தெரியாமல் சொற்ப தமிழ் தெரிந்தவர்களும் தமிழிலேயே, தனக்குத்தாளுக இலேசில் கற்றுக் கொள்ளும்படி தொழுகையில் ஓதுவதற்குறிய 21 ஸூராக்களும் ஓதவேண்டிய ஓதல்களும், 130 பரலுகளின் விபரமும். வாஜிப், சுன்னத் முஸ்தஹப் முதலானவைகளும், பலா, பேய், பிசாசு, முதலியவை நீங்கவும், எண்ணங்கள் கை கூடவும் அனேகவித துஆக்களும் அமல்களும் இன்னும் அநேக நஸீஹத்துகளும், தமிழிலும், அரசிலும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த கிதாபு தமிழ் மட்டில் தெரிந்த ஒவ்வொரு முஸ் லிம்களுககும் மிகவும் அவசியமானதாகும்.

அழகான பைண்டு செய்தது.
இதன் விலை ரூபா 3-0-0 தபால் சிலவு வேறு.

கிடைககுமிடம்:—
கே. எம். யாஸீன் அண்டு ஸன்,
பேர்ணும்பட்டு போஸ்டு. (வட ஆற்காடு ஜில்லா.)

இமாம் ஷாபிஈயின் அபிமானிகள்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய அருங்குணங்களைப்பற்றி, அவர்களுடன் இணங்கி இருந்து வாழ்ந்தவர்கள் மட்டும் புகழ்ந்து கூறு

கிறார்கள் என்றெண்ணவேண்டாம்: ஒருவரிடம் அபிமானமும் அகீதாவும் உடையவர்கள், அவரைப் புகழ்ந்தும் போற்றியும் பேசுவது இயற்கைதான். ஆனால் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் அருங்குணத்துக்காகவும், கல்வித் திறமைக்காகவும், பேரூழியத்துக்காகவும், பாமரர் முதலான பொது ஜனங்களும் போற்றிப் புகழ்ந்து அபிமானிப்பவர்களாயிருந்து வந்தனர்.

உதாரணமாக, அபூஹஸ்ஸான் ஜியாதீ என்ற பெரியார் கூறும் அபிமான மொழியாவது :—

"இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களின் பிரதம சிஷ்யரான முஹம்மத் பின் ஹஸன் (ரஹ்) அவர்கள், நம் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களைப் போற்றிப் புகழ்ந்து பிரஸ்தாபித் திருப்பதைப்போல், வேறு யாரையும் போற்றிப் பிரஸ்தாபித்தது கிடையாது. இங்கு ஒரு சம்பவம் குறிப்பிடத்தக்கது:—ஒரு சமயம் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், முஹம்மத் பின் ஹஸனுடைய வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அப்போதே, ஏதோ அவசியமான காரியத்துக்காக முஹம்மத் பின் ஹஸன் குதிரை மீது (ஸவாரியில்) ஏறி புறப்படுவதற்குத் தயாராய் விட்டார்கள். அச்சமயம் இமாம் ஷாபிஈ (ரஹ்) தம் இல்லத்துக்கு வந்துவிட்டதை அறிந்ததும், உடனே வாகனத்தை விட்டும் இறங்கிவந்து, இமாம் அவர்களை வரவேற்று உபசரித்து வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போனார்கள். அன்று தாங்கள் புறப்பட்ட காரியத்தையும் நிறுத்தி விட்டு, இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுக்குப் பணிவிடை புரிவதிலே ஈடுபட்டிருந்தார்கள். இமாம் ஷாபிஈக்கு ஓய்வும் வசதியும் கிடைக்கவேண்டு மென்பதற்காக, வீட்டிலிருந்து வெளியாட்களை யெல்லாம் போகச் சொல்லிவிட்டு, ஜாகையை காலி செய்து 'தனிமை' செய்து கொடுத்தார்கள். அன்று இரவும் பகலும் அன்னியர் எவரும் பிரவேசிக்க அனுமதிக்கவில்லை.

இமாம் அவர்களின் ஞாபக சக்தி

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் அபாரமான ஞாபக சக்தி-அதாவது எதையும் மறக்காதிருக்கும் சக்தி-யுடையவர்களா யிருந்தார்கள். பால்யகால, பழங்கால நிகழ்ச்சிகள் எதுவும் அவர்களது ஞாபகத்தை விட்டும் மறைந்து போனது கிடையாது.

குறிப்பாக இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், பார்வை யிடுகின்ற-ஓதுகின்ற கிதாபுகளிலிருந்து எதையும் மறந்துவிட மாட்டார்கள். இதற்கொரு உதாரணச் சம்பவம் சான்றாகும்: இதைப் பற்றி இமாம் முஹம்மத் (ரஹ்) அவர்கள், (இமாம் அபூ ஹனீபா ரஹ்-அவர்களுடைய சிஷ்யர்) கூறுவதாவது :—

"எனது உஸ்தாது இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களுக்குரிய 'அவஸத்' என்ற கித்தாபு என்னிடம் இருந்தது. அதை ஒரு முறை, இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் என்னிடமிருந்து கேட்டு வாங்கிக் கொண்டு போய், ஒரே ஒரு முறை மட்டும் வைத்துப் பார்வையிட்டு விட்டு மறுநாள் கொண்டு வந்து கொடுத்து விட்டார்கள். 'ஏன் திரும்பக் கொடுத்து விட்டீர்கள்' என்று கேட்டதற்கு "எனக்கு இது முழுதும் பாடமாய் விட்டது" என்று சொன்னார்கள்.

'மார்க்கச் சட்ட அடிப்படைத் திட்டம்'

இஸ்லாமியக் கலையில் "உஸூலே பிக்ஹு" என்றொரு வகையுண்டு. தினமும் அனுஷ்டிக்க வேண்டிய ஷரீஅத்துடைய மஸ்அலாக்கள் எங்ஙனம் அமைக்கப்பட்டன என்ற ஆராய்ச்சி பற்றியதாகும் அது. பிக்ஹு என்னும் மஸ்அலாக்கள் அமைக்க அடிப்படைத் திட்டங்களான உஸூல்கள் (நிபந்தனைகள்) போதிக்கப் படுபவையாகும் அவை. இதற்கு ஹதீதுகளையே ஆதாரமாகக் கொள்வர். அதாவது, எந்த ஹதீது 'நாஸிக்' கானது, எந்த ஹதீது 'மன்ஸூக்' கானது என்று கண்டு பிடிப்பது இமாம்களுடைய வேலையாகும். அதாவது, ஒரு ஹதீதுடைய போதனையைக் கொண்டு, இன்னொரு ஹதீதுடைய போதனை ரத்து செய்யப்பட்டு விடும். இந்த மாதிரியான அபார ஆராய்ச்சிகளில் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் மிகத் திறமையுடையவர்களா யிருந்தார்கள்.

இஸ்லாமிய உலக உலமாக்கள், சில அருஞ் சேவைகளுக்காக இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுக்கு நன்றி பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். "அப்வாபே கஸீரத் மஃரூபா" என்பது இமாம் ஷாபிஈ (ரஹ்) உடைய பிக்ஹ் ஆராய்ச்சி நூல். இதில் 'இஸ்திக்ராஜ் மஸாயில்' என்றும் 'பஹ்மே மஆனி' என்றும் மார்க்கச்சட்ட ஆதார திட்டங்களை வகுத்து, இன்ன லக்ஷியத் திட்டத்தின் மீது மஸ்அலாக்களை, ஹதீதுகளிலிருந்தும் குர்ஆன் வாக்கியங்களிலிருந்தும் கிரஹிக்க வேண்டு மென்று, பொதுவான ஆதார விஷயங்களைக் கூறி யிருக்கிறார்கள். இங்ஙனம் இல்மு விஷயத்தில் அனுகூலங்கள் செய்தளித்ததற்காக, ஆலிம் உலமாக்கள், இமாம் ஷாபிஈ (ரஹ்) வை என்றென்றும் பாராட்டுகிறார்கள்.

மூன்றாவது நூற்றாண்டின் மகான்

இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) அவர்கள் ரிவாயத்து செய்வதாக, ஹஜ்ரத் அஸ்வை என்ற பெரியார் கூறுவதாவது :—

"எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹு தஆலா, உலக மன்பதைகளுக்கு மகத்தான முறையில் சேவை செய்வதற்காக-தீனுடைய கித்மத்துக்காக-ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒரு மகானை

சிருஷ்டித்து அனுப்பி வைப்பது ஆதிகாலத் தொட்டு தெய்வீக வழக்கமாய் இருந்து வருகிறது. இத்தகைய நாதாக்கள், இஸ்லாமிய சமூகத்தினிடையே சேவை செய்து, அல்லாஹ்வுடைய 'கலாம்' என்னும் கட்டளைகளையும், ரஸூலுல்லாஹ்வுடைய 'சுன்னத்' என்னும் போதனைகளையும் பரிசுத்தப்படுத்தி, புனருத்தாரணம் செய்து, நாகரிக மானதாக்கிச் செல்கிறார்கள். இப்படிப்பட்ட சீர்திருத்தகர்களில் ஹிஜ்ரீ இரண்டாம் நூற்றாண்டின் சீர்திருத்தக மகான்-அப்போது இஸ்லாத்திற்கு மாபெரும் சேவை செய்த உமர் இப்னு அப்துல் அஜீஸ் என்னும் 'உத்தமர்' ஆவர். ஹிஜ்ரி 3-வது நூற்றாண்டின் சீர்திருத்தக மகான் நம் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் ஆவர்.

இது மிகைப்படக் கூறிய சொல்லல்ல. உண்மையில் இமாம் ஷாபிஈ (ரஹ்) 'உஸூலே பிக்ஹ்' என்னும் சன்மார்க்க அனுஷ்டான சட்ட திட்டங்களுக்காக, வகுத்த ஆதாரக் கலைக்காகவே இங்ஙனம் பாராட்டப் படுகிறார்கள்.

"கித்தாபுர் ரிஸாலத்"

ஹஜ்ரத் அபூ தவ்ரு என்ற பெரியார், அறிவிப்பது :—நான் ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் மஹ்தீ அவர்கள் சமுகத்திற்குச் சென்று ஓர் விண்ணப்பம் செய்தேன். அதாவது, "திருக் குர்ஆனுடைய உட்கருத்துக்களை (மஆனிகளை) தெளிவுற விளக்கும்படியானதும், ஹதீதுகளை (அக்பார்களை) கொண்டதும், எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்படக் கூடியதுமான கித்தாபு ஒன்றை எனக்கு இயற்றிக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டேன்.

என் கோரிக்கையை, அப்துர் ரஹ்மான் பின் மஹ்தீ அவர்கள் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களிடம் தெரிவித்துக் கொண்டார்கள். அதற்கிணங்கி, இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் "கித்தாபுர் ரிஸாலத்" என்ற நூலை இயற்றி அருளினார்கள்.

இக்தக் கித்தாபு, பகீஹ்களான ஆலிம் உலமாக்களால் மிகவும் பாராட்டப் படுகிறது. ஏனெனில், அதில் ஸஹீஹான-ஸஹீஹல்லாத ஹதீதுகள் இன்னின்னவை யென்றும், ஆயத்துகளில் நாஸிக்-மன்ஸூக் இன்னின்னவை யென்றும் சாங்கோபாங்கமாய் கூறப் பட்டிருக்கிறது என்பது ஆலிம்கள் அபிப்பிராயம்.

(தொடரும்)

தாரீகுல் குலபா

இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்.

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமையாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் ஆரம்பமும், இஸ்லாத்தை நிலை நாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1–60

மேற்படி இரண்டாவது பாகம்: இதில் ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1–28

மேற்படி மூன்றும் பாகம்: இது ஹஸரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் அலி (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் இமாம் ஹஸன் (றலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும், அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5-கிலாபத்து ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1–28

ஷை மூன்று பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3–60

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

துப்பு துலக்கிய தூயவர்.

7-வது அத்தியாயம்.

வயோதிகன் ரஸ்தா வழியாகச் சென்று பிரதான பாட்டைக்கு வந்தான். புதர் மறைவில் இருவர் இருந்து ரொட்டியும் குர்மாவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவன் 'சிட்டி' அடித்ததும் அவ்விருவரும் ஓடோடி வந்தனர்; கட்டு மஸ்தான தேகமுடைய அவர்கள் காட்டு மிராண்டிபோல காணப்பட்டனர்.

"உங்களில் எவனுக்காவது சிப்கத்துல்லாவைத் தெரியுமா?"

"அவனுடன் "மாமியார் வீட்" டில் நானும் விருந்துண்டிருக்கிறேன். பந்தயக் குதிரை மோசடியில் சம்பந்தப்பட்டு சிறை சென்றவன் தானே அவன்?" அவர்களிலொருவன் வினவினான்.

கரீம் ஷரீப் தலை அசைத்தான்.

"அவன் வீட்டில் இருக்கிறான். ரயில்வே ஸ்டேஷனுக்கு அவன் நடந்து செல்லக்கூடும். வயல்கள் வழியாக குறுக்குப் பாதையில் அவன் செல்வது சாத்தியம். உங்கள் காரியம் அப்போது சுலபமாகிவிடும். அவனை அடித்து நொறுக்கிவிட வேண்டும். தெரிகிறதா? பகிரங்கமாகச் செய்யவேண்டியிருந்தாலும் பயப்படாதீர்கள்; அவனை நையப் புடைத்து விடுங்கள். அவனுடன் வேறு எவராவது இருந்தாலும் அவனையும் கவனித்துக் கொள்ளுங்கள்"

கட்டளையிட்டு விட்டு கரீம் ஷரீப் கார் செல்லும் பாதையை நோக்கியவாறு மறைந்து நின்றான். முதல் கார் வெளியே புறப்பட்டது. காதர்கான் கனவேகத்தில் காரில் பறந்து கொண்டிருந்தான்; அவன் அவ்வாறு செய்வது அவசியமாக விருந்தது.

அந்தக்காரில் கலவரத்தோடு மணப்பெண் மரியம் இருப்பதைக் கண்டான். ரஸ்தாவின் மத்தியில் நின்று கொண்டு காரைக் கவனித்துக் கொண்டிருந்தார் கரீமுல்லா. அவருக்குத் தெரிந்திருந்தால்....? இந்த எண்ணம் எழுந்ததும் வயோதிகனின் வதனத்தில் புன்னகை மறைந்தது. கரீமுல்லாவுக்குத் தெரியாது; அவருக்குத் தெரிவிக்கப் படவில்லை. ஏன்? சிப்கத்துல்லாவுக்குத் தெரிந்திருந்தால் அவளை வெளியே போக விட்டிருக்கமாட்டானே. ஒரு வேளை ஜீனத் பொய் சொல்லி யிருப்பாளோ? அவளைப்போன்ற அணங்குகளை நம்புவது அபாயகரமானது. பரபரப்பு, படபடப்பு ஏற்படுத்துவதில் அவர்கள் ஆனந்தம் கொள்கிறார்கள். சிறைபறவை சிப்கத்துல்லா....அபாயகர

மான ஆசாமி. அசிரத்தையாக, அக்கரையின்றி ஒரு கையைப் பின்புறமாக கட்டிக்கொண்டு, மற்றொரு கையால் காரைநோக்கி சமிக்ஞை செய்து கொண்டிருந்தான்.

இரண்டாவது கார் வெளியே வந்தது. அதிலே விருந்தாளிகள் சிலர் வீற்றிருந்தனர். சிப்கதுல்லாவுக்கு புத்தி இருந்தால் அந்த கோஷ்டியுடன் அவன் காரில் சென்று விடுவான். ஆனால் அவனுக்கு அறிவு மழுங்கிவிட்டதோ! சாமானிய சண்டாளர்களைப் போல தனியாக அல்லவா நின்று கொண்டிருக்கிறான்! அவன் தனிமையாக அல்லவா வெளியே வருகிறான்! எதிர்பார்த்தபடி வயல்கள் வழியாகக் குறுக்கு பாதையில் அல்லவா அவன் செல்கிறான்!

எண்ண அலைகளில் அகப்பட்டு அவஸ்த்தைப் பட்ட கரீம் ஷரீப் பின்புறம் நோக்கினான். அவனது வேட்டை நாய்கள் 'மோப்பம்' பிடித்துக்கொண்டே பதுங்கி பதுங்கி இரையைத் தொடர்ந்து சென்றனர். ஆம், அந்த இரு கயவர்கள் பின் தொடர்ந்து வருவதை சிப்கத்துல்லா உணர்ந்து கொள்ளவில்லை.

ரஸ்தாவிலிருந்து வயல்களுக்கு இருபாட்டைகள் சென்றன; அவை யிரண்டு சந்திக்கும் இடம் 'Y' போன்று அமைந்திருந்தது. அந்தக் கட்டத்தை கடந்ததும் பின்னால் காலடிச் சப்தம் கேட்டு திரும்பியபோது அறிமுகமான ஆசாமி யொருவனைக் கண்டார். அங்கிருந்து ஓட்டம் பிடித்திருந்தால் அவர்களிடம் அகப்படாமல் தப்பிச் சென்று விடலாம். எனினும், அவர்களை எதிர்த்துச் சமாளிப்பதென அவர் உறுதி கொண்டார். இரு கரங்களிலும் கைப் பிரம்பைச் சுழற்றிக்கொண்டே அவர்கள் பக்கமாக திரும்பினார்.

அவர்களில் பெரிய ஆசாமி சொன்னான்: "ஆ, சிப்கத்துல்லா. அவசரமாக நீர் எங்கு சென்று கொண்டிருக்கிறீர்? உம்மிடம் பேசுவதற்கு நான் விரும்புகிறேன். இரகசியமாக பீடிதருவித்து பிடிக்கிறேன் என்பதை சிறை அதிகாரியிடம் சொல்லிய பெரிய மனிதர் அல்லவா நீர்?"

அந்த மனிதன் சொல்லிய கட்டுக்கதை, பொய்வதந்தி. எனினும், சிப்கத்துல்லாவை மடக்கிப் பிடிப்பதற்கு உகந்த உபாயம் அது. அந்த இருவரின் கரங்களிலும் தடிகளும் கழிகளும் இருந்தன.

பிரம்பு அடிபடாமல் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு பின்னால் சென்றார் சிப்கத்துல்லா. நடுப்பகல் வெளிச்சத்தில் நீளமான ஒரு வஸ்து பளபளவென மின்னியது. தற்காப்புக்காக தமது பட்டாக்கத்தியை யுருவிப் பிடித்தார் அவர். அபாயகரமான அந்த கூரிய ஆயுதத்தைக் கண்டதும் அந்த இருவரும் பிரமித்து பின்னடைந்தனர்.

ஒவ்வொருவர் முகத்துக்கு நேராகவும் பட்டாக்கத்தியை வீசிய போது, கலங்கினர் அவர்கள்; வழிவிட்டு ஒதுங்கி நின்றனர். ஒருவனது முகத்திலிருந்து இரத்தம் கொட்டியது.

"மிருகமே, உனக்கு என்சூடு இருந்து கொண்டிருக்கட்டும். நான் அழைக்கும்போது நீ வா" என்ருர் அவர். பட்டாக்கத்தியை உறையில் சொருகிக்கொண்டு தமது வழியில் சென்ருர். அவரது அசிரத்தையும் அமைதியான போக்கும் அவர்களுக்கு அச்ச மூட்டியது.

"அவன் அஞ்சா நெஞ்சமுடைய இரும்பு மனிதன்" முகத்தில் காயம் பட்டவன் புலம்பிக்கொண்டே சொன்னுன், "எப்படியும் அவனை நான் கொன்று போடுவேன்".

ஆனுல், அவரைப் பின் தொடர்ந்து செல்வதற்கு அவன் முயற்சி செய்யவில்லை; அவனது தோழன் அச்செயலைக் கண்டு ஆனந்தம் அடைந்தான்.

சிப்கத்துல்லா விரைவாக நடந்தார்; சிறிது நேரத்துக்குள் ரஸ்தாவை யடைந்து, ஒரு போர்டுகார் கிடைக்கவே, வாடகைக்கு அமர்த்தி, உரிய காலத்தில் ரயில்வே ஸ்டேஷனை அடைந்தார். ரயில்வே கால அட்டவணை அன்று முதல் மாறுதல் செய்யப்பட்டிருந்தது. எனவே அவர் அரைமணி நேரம் அங்கு காத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று.

பிளாட்பாரத்தைக் கடந்து ஹோட்டலுக்குள் சென்று டெலிபோன் அறைக்குள் சென்று கால்மணி நேரம் கழித்து வியர்வை கொட்ட வெளியே வந்தார்.

மீண்டும் பிளாட்பாரத்துக்கு வந்ததும் அறிமுகமான ஆட்கள் எவராவது இருக்கின்ருர்களா என்று பார்த்தார். கடைசியில் கரீம் ஷரீபைக் காணலாம் என்ற அவரது எண்ணம் வீண் போகவில்லை. ரயில் வண்டி வருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு கரீம் ஷரீப் வந்தான்.

சிறையிலிருந்து சிறகடித்துப் பறந்து வந்த பிறகு அந்த இரு 'பறவை' களும் முதல் தடவையாக இப்போதுதான் சந்தித்தனர்; கரீம் ஷரீப் வியப்பு கொண்டது நியாயந்தான்.

"ஓ! சிப்கத்துல்லாவா? உம்மை நான் காண்பது மெய்தானு? ஆச்சரியமாக வல்லவா இருக்கிறது! நீர் எப்போது வெளியே வந்தீர்?"

"உமது சினேகபாவ பேச்சை நிறுத்திக் கொள்ளும். தனி வண்டியில் நீர் ஏறிக் கொண்டீரானுல் உம்மிடம் இரண்டொரு விஷயங்கள் பேசவேண்டி யிருக்கிறது".

"திருமணத்துக்குச் சென்றிருந்தீரா? நல்ல நாகரீகப் பெண் அல்லவா? அவளது மணுளனும் நல்லவன் அல்லவா? அவன் ஒரு லட்சாதிபதி என சொல்லிக் கொள்கிருர்கள். பணக்கார சம்பந்தம் கொண்டது கரீமுல்லாவின் அதிர்ஷ்டம் அல்லவா? அதிர்ஷ்டம் அடித்தாலும் இப்படியல்லவா இருக்க வேண்டும்"

சிப்கத்துல்லா பதில் அளிக்கவில்லை. ரயில் வண்டி வந்து நின்றதும் காலியாக விருந்த முதல் வகுப்புப் பெட்டியைத் திறக்க அதில் கரீம் ஷரீப் ஏறிக்கொண்டான்.

"உமக்குப் பணக் கஷ்டம் இருந்தால்..." கரீம் ஷரீப் பேச்சுக் கொடுத்தான்.

சிப்கத்துல்லா சுருக்கமாகச் சொன்னர்: "எனக்குப் பணக்கஷ்டம் எதுவுமில்லை. நீயவர் தோழமைத் தவிர வேறு எதிலும் எனக்குப் பஞ்சமில்லை. நான் சொல்வதைக் கேளும். உமக்கு நான் ஒரு வாய்ப்பு அளிக்கப் போகிறேன்"

கரீம் ஷரீப் வியப்படைந்தான்; விழித்தான். ஆனல் சிப்கத்துல்லா அவனது போக்கு கண்டு திருப்தி யடையவில்லை.

"சிப்கத்துல்லா நீர் கூறுவது எனக்கு விளங்கவில்லை. எனக்கு வாய்ப்பு அளிப்பதாக பேசுவதன் பொருள் என்ன? நீர் குடித்து விட்டிருக்கிறீரா?"

கரீம் ஷரீபுக்கு எதிரே சிப்கத்துல்லா உட்கார்ந்து கொண்டார். அவனது முழங்காலில் கைகளை ஊன்றிக் கொண்டு அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"கரீம்! உம் பையனை திரும்ப அழைத்துக் கொள்ளும்; இல்லாவிடில் உமக்குத் தொந்தரவு ஏற்படும். ஆத்திர மடைய வேண்டாம். அன்பரே! ஏமாற்று வித்தையில் எனக்கு நம்பிக்கை கிடையாது. காதர்கானை அழைத்துக் கொண்டு, இன்றிரவே அப்பெண்ணை அவளது வீட்டுக்குத் திருப்பி அனுப்பிவிடு. நீர் அவ்வாறு செய்யாவிட்டால், உமது செயலை நான் அம்பலப் படுத்தி விடுவேன். நான் சொல்வது உமக்குப் புரிந்ததா?"

"சிப்கத்துல்லா, நீர் கூறுவதை என்னல் புரிந்து கொள்ள முடிகிறது, ஆனல் அவற்றின் அர்த்தத்தை என்னல் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. எந்த பையனைப்பற்றி நீர் பேசிக் கொண்டிருக்கிறீர்? எனக்கு ஒரே ஒரு பையன்தான் இருக்கிறுன், அவனும் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருக்கிறுன்"

"நீர் ஒரு பித்தலாட்டக்காரர்; அற்ப விஷயங்களுக் கெல்லாம் பொய் சொல்லி அகப்பட்டுக் கொள்பவர். இன்று கரீமுல்லா கானின் புத்திரியைக் கடிமணம் புரிந்து கொண்ட காதர் கானைப் பற்றித்தான் பேசுகிறேன். நான் சாஹிபையும் 'கண்ணி'யில் பிடிப்பதற்கு முயற்சிக்கிறீர். ஆனல் வேறு வழியில் அவரை வசப்படுத்துவதற்கு பிரயத்தன மெடுத்துக் கொள்ளும்"

"அவள் அவளது மன விருப்பத்துக் கிணங்க மணந்து கொண்டாள். மனமொப்பிய மணத்துக்கு எந்த சட்டமும் தடை விதிக்கவில்லை அல்லவா? கண்டதும் காதல் கொண்டாள் காரிகை. நான் காண விரும்புவது அதுதான். கட்டிளங் காளைகள் காதல் புரிவதைக் காண விழைகிறேன்"

"இப்போது அவன் விரும்பினல் விவாக ரத்து கோரலாமல்லவா? நான் சொல்வதைக் கவனமாகக் கேளும். உதக மண்டலத்துக்குச் சென்றதும் 'உம்மத் உணவு விடுதி' க்குச் சென்று உமது மகனைக் கண்டு விஷயத்தை விளக்கிச் சொல்லும். அவன் அறிஞன். ஆதலால் உமது கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடப்பான்"

'இல்லை, உமது கட்டளைகள்'' என்று புன்னகையுடன் கரீம் கூறினன். ''நான் அவ்வாறு செய்யாவிடில் என்ன நிகழும்?''

''உமது செயலை நான் அம்பலப் படுத்தி விடுவேன்''

''அவர்கள் மணந்து கொண்டிருக்கிறார்கள். சட்டப்படி, சாக்ஷிகள் முன்பு மணம் நிகழ்ந்திருக்கிறது. எனவே விவாகரத்து பெறுவது முடியாத காரியம். கருப்புநாயைக்கூட வெள்ளை நாயாகமாற்றி விடலாம். ஆனால் விவாக பந்தத்திலிருந்து அவ்விருவரையும் விடுவிக்கமுடியாது''

''ஆனல், காதர்கானை 'மாமியார் வீட்டுக்கு' அனுப்பி விடுவதற்கு என்னால் முடியும்''

''என்னென்ன காரணங்களுக்காக? உமது குற்றப் பத்திரிகையை சிறிது வாசித்துக் காட்டுவீரா?''

''கள்ள நோட்டு அச்சடிக்கும் பெரும் பேர்வழி அவன். அவனைப் பிடிப்பதற்கென பல்லாயிரக் கணக்கில் அரசாங்கத்தினர் செலவிட்டிருக்கின்றனர். அவனைக் கையுங் களவுமாகப் பிடித்துச் சிறையிலடைக்கும் பொருட்டு தலை சிறந்த துப்பறியும் நிபுணர்களையும் அவர்கள் அமர்த்தி யிருக்கிறார்கள்; அவர்களுக்கு அவசியமான தகவலை என்னால் அளிக்கமுடியும். அவனது கள்ள நோட்டுகள் அச்சாகும் ஸ்தலம் எனக்குத் தெரியும்; புழக்கத்துக்கு அவை வெளியிடப்படும் ஸ்தலமும் எனக்குத் தெரியும். அவனது ஏஜெண்டுகளில் நால்வர்கூட எனக்குத் தெரியும். கள்ள நோட்டு அச்சடிக்கும் இரகசியம் உமக்கும் உமது மைந்தனுக்கும் மட்டுமே தெரியுமென நீர் நினைத்துக் கொண்டிருக்கிறீர். கள்ள நோட்டுப் பேர்வழி அவன் தான் என்பது இன்ஸ்பெக்டர் இனயத்துல்லாவுக்குத் தெரிந்திருக்கிறது. வலிமாவின்போது (திருமண விருந்தின் போது) என்னிடம் அவரே இவ்விஷயத்தைச் சொன்னர். அவர் வேண்டுவதெல்லாம் சாக்ஷியம்தான். அந்த சாக்ஷியத்தை என்னால் அளிக்க முடியும். போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ரஜாக்கானுக்கும் தெரியும். அவருக்குத் தெரியாது என்று எண்ணிக் கொண்டிருப்பது தவறு. இரகசியத்தை அவரிடம் வெளியிட்டு விடுவேனுயின் பிரபஞ்சத்திலே பிரக்யாதி பெற்ற பிரபல துப்பறியும் நிபுணராக அவர் அங்கிகரிக்கப்படுவார்''

கரீம் ஷரீபின் உதடுகள் உலர்ந்து விட்டன. கண்கள் பிதுங்கின.

கலக்கத்தோடு கரீம் வினவினன். ''காட்டிக் கொடுக்கும் கயமைத் தனத்தில் ஈடுபடப் போகிறீரா?'' அவனது குரலில் பீதி குடிகொண்டிருந்தது. ''கனவான் போல காணப்படுகிறீர்; பேசுகிறீர். கயமைத் தனமும் காணப்படுகிறதே, இம்மாதிரி உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் பயப்பட்டு பணிந்து விடுவேன் என்று எண்ணுதீர்.''

''உருட்டல் மிரட்டல் எதுவுமில்லை. உமது மைந்தன் அவ்வழியில் என்னிடம் சிக்கிக் கொண்டிருக்கிறான்'' கையை உயர்த்தி முஷ்டி காட்டினர் சிப்கத்துல்லா.

ரயில் பெட்டியின் ஓரத்தில் ஒதுங்கி உட்கார்ந்திருந்தான் கரீம்.

"அவனை நீர் வசப்படுத்தி விட்டீரா? எனவே, உம்மை ஏமாற்றுவது முடியாத காரியம் என்பதை உணர்ந்து கொண்டேன். கள்ள நோட்டு விநோதமானது. உமக்கு அது தெரியுமா? நீர் படித்துப்பட்டம் பெற்றவராதலின் உம்மால் உணர்ந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். ஆனால் அது நல்ல சரக்கு. இதைப்பாரும், இதோ ஒரு நோட்டு இருக்கிறது. அது அசல் நோட்டுப்போல இருக்கிறதா, இல்லையா?"

சட்டைப் பையில் கைவிட்டு, ஒரு அங்குல சதுரமுள்ள காகிதக் கத்தையை கரீம் வெளியே எடுத்தான். ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் காட்டினான். விரலால் மெல்ல பிடித்துக்கொண்டு அதனை அவன் கண்ணாடி மூலம் உற்று நோக்கினான். சுருக்கம் விழுந்த முகத்தில் பெருமை தவழ்ந்தது.

"இது அசல் நோட்டா, அல்லவா?" அவன் அகமகிழ்ச்சியோடு வினவினான்.

வெய்யிலும் வெளிச்சமும் அதிகமாக இருந்தபோதிலும் ரயில் பெட்டியிலிருந்த நான்கு மின்சார விளக்குகளும் திடீரென பிரகாசித்தன. பட்டப்பகல் வெளிச்சத்துக்குமுன்பு அவை மங்கலாக அவற்றின்மீது சூரிய ஒளி விழுந்ததும் ரயில் பெட்டிமீது நிழல் சாய்ந்தது.

"குகை யொன்று வருகிறது. அவற்றை நல்லபடி காண்பதற்கு உமக்கு வாய்ப்பு கிடைக்கும். இவற்றைப் பரிசோதித்துப்பாரும். அசல் நோட்டு போலவே காணப்படுகிறது. பாங்க் அதிகாரிகளும் கூட திணறுகின்றனர்."

இரைச்சலோடு இரயில் குகைக்குள் பிரவேசித்தது. கதவுப் பக்கம் முதுகு வைத்துக்கொண்டு கைகளில் நோட்டை பிடித்துக் கொண்டிருந்தான் அவன்.

"ஒரேஒரு குறைதான் இருக்கிறது—நீர்க்குறி. இரகசியங்களை வெளியிடுகிறேனல்லவா? இதோ பாரும்."

வளைவு விளக்கு முன்பாக நோட்டை உயர்த்திப் பிடித்தான். அதனைப் பார்ப்பதற்காக அவனுக்குப் பின்னால் சிப்கத்துல்லா நிற்க வேண்டியதாயிற்று. குறுகிய குகைக்குள் ரயில்வண்டி விரைந்து ஓடியபோது காது செவிடாகும்படி இரைச்சல் கேட்டது.

" 'ஐ' என்னும் எழுத்தைக் கவனியும், 'ஐந்து' என்பதிலுள்ள முதல் எழுத்தை நன்கு கவனித்துப்பாரும்—அதில் ஏதாவது விசேஷம் தென்படுகிறதா?"

நோட்டை உற்று கவனிப்பதற்காக சிப்கத்துல்லா குனிந்தபோது தோளைக்கொண்டு அவரைப் பலமாகத் தாக்கினான். இந்த திடீர் தாக்குதலால் அவர் நிலை தடுமாறினர். கதவுமீது விழுந்தார்; பலமான குத்து விழுந்தது; கதவு திறந்து கொண்டது; இருள் சூழ்ந்த குகைப்பக்கம் விழுந்தார். ஜன்னல் கிராதியை அவர் பிடித்துக் கொண்டு தொங்கினர். ஓங்கிய முஷ்டியுடன் அவரது விரல்களில் கரீம் ஷரீப் குத்துவிடவே, அப்பிடியும் தவறி அவர் கீழே விழுந்தார். (தொடரும்)

(28-வது பகுதி)

திருக் குர்ஆன் : : : :

: : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

ஸாமிரி மந்திரவாதியுடன் மூஸா நபியின் விவாதம்

(மூஸாநபி, ஊரில் இல்லாத நேரங்களில், ஸாமிரி என்ற மந்திர வாதி, தன் தந்திரோபாயங்களினால் ஜனங்களை வழிகெடுத்து ஏமாற்றி வந்தான். விசித்திரமான காளை மாட்டுக் கன்றின் உருவம் செய்து, அதை அசையச் செய்து, ஜனங்கள் அதை வணங்கும்படி துற் போதனை செய்வான். அப்படிப் பட்டவனுடன் மூஸா நபி செய்த விவாதம் திருக் குர்ஆனில் விளக்கப்பட்டிருக்கிறது :—)

மூஸா நபி "ஏ ஸாமிரியே, உன் (அந்தரங்க) நிலைமை என்ன? (நீ ஏன் இப்படி யெல்லாம் செய்கிறாய்?") என்று கேட்டார். அதற்கு ஸாமிரி கூறலானான்: "இந்த இஸ்ராயீல் கூட்டத்தாரில் எவருமே கண் டில்லாத (அற்புதத்)தை நான் கண்டிருக்கிறேன். (பிர்அவுன் மன்னர், நதிப்பிரவாகத்தில் மூழ்கடிக்கப் பட்டபோது) வானவர் ஜிப்ர யீல் குதிரைமேல் ஏறிக்கொண்டு வந்ததை நான் கண்டேன். அப்போது நான் அந்த வானவருடைய (குதிரையின்) காலடிச் சுவட்டின் மண் ணில் ஒரு பிடியை எடுத்து வந்தேன். அந்த மண்ணை நான் (எங்கள் காளை மாட்டுக் கன்றின் சிலை வயிற்றில்) போட்டேன். அதன் மகிமையால் அது, (அந்த காளைக்கன்று) பசுவின் குரலால் பேசத் தொடங்கி விட்டது. அப்போது என்னுடைய மனம் இவ்வாறு செய்யவே தூண்டியது" என்பதாகும். இதைக் கேட்டு மூஸா (நபி மிகவும் கோபித்துச்) சொன்னதாவது :-"ஏ ஸாமிரி, (என் முன் நில்லாமல்) நீ போய்விடு. இந்த ஜீவியத்திலேயே உனக்குரிய தண் டனை யாதெனில்: (ஒவ்வொருத்தரிடமும்) 'நீ என்னைத் தொடா தீர்கள்' என்று சொல்லக் கடவாயாக. (அதாவது, ஸாமிரி இனப் பேர்வழிகளை யூதர்கள் வெறுப்பர்; அவர் கைப்பட்ட பண்டம் எதை யும் வாங்கி உண்ண மாட்டார்கள்.) உன் தண்டனைக்குரிய காலத் தவணையும் (கியாமத்து நாளில்) குறிப்பிடப் பட்டிருக்கிறது. மேலும் நீ செய்து வைத்து பூஜாரித்தனம் புரியும் தெய்வத்தை (காளை மாட்டுச் சிலையை) கண்ணால் பார்ப்பாயாக; இதோ அதை யாம் உமது கண் முன்னிலையிலேயே (தெய்வ அக்கினி மூளச் செய்து) எரித்துப் போடுவோம். பிறகு அதை (கரிந்த சாம்பலை) நதியில் எறிந்து அடித்துக் கொண்டு போகச் செய்வோம்" என்று கூறினார். (ஏ ஜனங்களே,) உங்கள் வணக்கத்துக்குரிய இறைவன் (மஃபூத்)

அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு நாயன் இல்லை. அவனுடைய ஞானம் (என்னும் அறிவு) எல்லா வஸ்துக்களின் மீதும் சூழ்ந்து இருக்கிறது. (ஜுஸு: கால அலம்; ஸூரா: தாஹா; ருகூ: 5)

சுவர்க்கத்தில் நபி ஆதமுடன் ஷைத்தானின் சதி

(அல்லாஹ்வாகிய) யாம், 'ஆதமுக்கு (ஸஜ்தா) வணக்கம் செய்யுங்கள்' என்று மலக்குகளுக்கு உத்தரவிட்டோம். அங்ஙனமே (அவர்கள் எல்லோரும் ஸஜ்தா) செய்தார்கள். ஆனால் இப்லீஸ் (என்னும் ஷைத்தான்) மட்டும், (நான் செய்யேன் என்று) விலகி விட்டான். எனவே யாம் (மனிதனை நோக்கி) "ஏ ஆதமே, (இன்று முதல்) இந்த இப்லீஸ் (என்னும் ஷைத்தான்) உமக்கும் உமது மனைவிக்கும் (உங்கள் சந்ததிகட்கும்) விரோதியாய் விட்டான். (ஜாக்கிரதை,) இவன் (சதிச் செய்து) உங்களை (இந்த) சுவர்க்கத்தி லிருந்து வெளியேற்றாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்றேல் மிகவும் துன்பப் பட வேண்டியதாகும். (இதோ) சுவர்க்கத்தில் உங்களுக்காக வேண்டியே இவை (சுகபோக சாதனங்கள்) இருக்கின்றன. இதனால் நீங்கள் பசியோடும் இருக்க மாட்டீர்கள், நிர்வாணமாகவும் ஆகமாட்டீர்கள். இங்கு உங்களுக்கு தாகக் கஷ்டமும் ஏற்படமாட்டாது. வெய்யிலும், (உஷ்ணமும்) ஏற்படமாட்டாது" என்று கூறினோம்.

ஆனால் ஷைத்தானோ, ஆதமுடைய மனதிலே சமுசயத்தை உண்டாக்கி வைத்தான். மேலும் (ஆதமை அணுகி) "ஏ மனிதரே, (உமக்கு இங்குப் பல விஷயங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.) நீர் விரும்புவீராயின், நீங்கள் சதா காலமும் இங்கு ஜீவித்திருக்க உதவும் ஒரு விருக்ஷத்தையும் (காட்டித் தருகிறேன்) என்றென்றும் பழையதாய் போகாத ஆட்சியையும் காட்டித் தருகிறேன்" என்று (ஆசைமொழி) கூறினான். (பன்முறை ஷைத்தான் அவரது அண்மையில் சென்று போதனை செய்யவே, ஆதம் அந்தப் பேச்சில் மயங்கிவிட்டார்.) எனவே, ஷைத்தான் அவருக்கு ஒருவகை மரத்திலிருந்து (கோதுமை உணவு) புசிக்கும்படி தூண்டினான். எனவே அந்த விருக்ஷத்து உணவிலிருந்து (ஆதம்—ஹவ்வா) இருவருமே புசித்துவிட்டனர். (அங்ஙனம் புசித்ததும் ஜல-மல உபாதை ஏற்பட்டது; மறைந்திருந்த) வெட்கஸ்தலங்கள் வெளிப்பட்டு விட்டன. எனவே இருவரும் (பரஸ்பரம் தத்தம் மானத்தை மறைத்துக் கொள்ள) இலைகளை எடுத்து ஒட்டி மூடினர்.

இவ்வாறாக, ஆதம் (என்னும் ஆதி மனிதர்), தம் இறைவனு(டைய கட்டளை)க்கு மாறுபாடு செய்து, சத்மார்க்கத்திலிருந்து விலகிச் சென்றார். ஆயினும் இறைவன் அவர்களை, (தண்டிக்காமல்) தன் அருட்பாக்கியம் கொண்டு ஆதரித்தான். மேலும் இறைவன் அவ்விருவரையும் நல்வழியில் நடத்தினான். இறுதியாக இறைவன்,

(ஆதமையும் அவர் சத்துரு ஷைத்தானையும் நோக்கி) "நீங்கள் இருவருமே இவ்விடத்தை (சுவர்க்கலோகத்தை) விட்டு கீழே (பூமிலோகத்துக்குச்) சென்று விடுவீர்களாக. இனி நீங்கள் இரு இனத்தாரும் ஒருவர்க் கொருவர் விரோதிகளாகவே வாழ்வீர்களாக. (இனி உங்கள் வாசஸ்தலம் விண்ணுலகமல்ல; மண்ணுலகம்தான்.) பிறகு (மனித இனமாகிய) உங்கள் பால், எமது புறத்திலிருந்து யாரேனும் வழிகாட்டி (நபி, தீர்க்கதரிசி, போதகர்) வந்து, உங்களில் எவர் எமது (சன்மார்க்க போதனையை) ஹிதாயத்தை ஏற்று நடப் பாரோ, அவர் வழி கெட்டுப்போக மாட்டார்; அவருக்கு (இகபரக்) கஷ்டங்களும் நேரிடமாட்டாது. ஆனால், எவரேனும் எம்முடைய தியானத்தை(யும் சன்மார்க்கத்தையும்) விட்டு, முகந்திருப்பிக் கொண்டு போய் விடுவாரோ அவருடைய ஜீவியம் (மிகவும்) இக் கட்டானதாய் விடும்; மேலும் இறுதி (கியாமத்து) நாளில் அவர்கள் அந்தகர்களாகவே எழுப்பப்படுவர்; அவர்கள் "ஏ இரக்ஷகனே, என்னை ஏன் குருடனாக இங்கு எழுப்பினாய்; நானோ (உலகத்தில் கண்கொண்டு) பார்ப்பவனாகவன்றோ இருந்தேன்?" என்று கேட்பர். அதற்கு இறைவன், (ஏ மாந்தனே) "எம்முடைய அத்தாட்சி (ஆயத் துகள்) உம்மிடம் வந்தபோது, (வழிகாட்டிகள் நல்வழிகாட்டிய போது) நீ, (கண் இருந்தும் குருடனாக) அதை உல்லங்கனம் செய்து விட்டாய்; ஆதலின் இன்று இங்கு (கியாமத்தில்) நீயும் உல்லங்கனம் செய்யப்பட்டு (குருடனாகி) விட்டாய். இதேமாதிரிதான் (இறைவ னாகிய யாம்) தீயவர்களிடம்—(அதாவது) நேர்மையைக் கடந்து (பாபத்தின் பால்) வெளியேறிச் சென்றவர்களிடம் பரிகாரம் செய்கின் றோம். தம் இரக்ஷகனின் அத்தாக்ஷிகளைக் கொண்டு (குர்ஆன்படி) ஈமான் கொள்ளாதிருந்தவர்கள் மீதும் (இவ்வாறே செய்வோம். (நிச்ச யமாக இறுதிகால (கியாமத்தின்) வேதனை கடுமையாகவும் (ஆனால்) தாமதித்து நிகழக்கூடியதாகவும் இருக்கும்" என்று (பதில்) கூறு வான். (ஜுஸுஉ: கால அலம்; ஸூரா: தாஹா; ருகூ:7.)

இப்ராஹீம் நபி விக்கிரஹச் சிலைகளை உடைத்த வரலாறு

(இறைவனாகிய) யாம், இப்ராஹீம் (நபி)க்கு, நேர்மையான (விசால) புத்தியை அளித்திருந்தோம். (இயற்கையாக) அவரைப் பற்றி (யும் அவரது ஏகத்துவ சுபாவம் பற்றியும்) அறிந்திருந்தோம். எனவே, (நபி) இப்ராஹீம் (விக்கிரஹம் செய்து பூஜிப்பவர்களான) தமது தகப்பனாரையும், அவரது சமூகத்தாரையும் நோக்கி "(செய் பொருள்களான) இந்த விக்கிரச் சிலைகள் என்னத்திற்கு? இதனை நீங்கள் பூஜை செய்கிறீர்களே ஏன்?" என்று (விவாதம் புரிந்து) கேட்டார். அதற்கு அவர் (தந்தை), "நாங்கள் (சுயமே செய்யும் வழக்கமல்ல இது). எங்கள் தகப்பன், பாட்டன்மார்களெல்லோரும்

இப்படித்தான் (பரம்பரையாக விக்கிரஹப்) பூஜை செய்து வந்ததை நாங்கள் பார்த்து வந்திருக்கிறோம்" என்று (சமாதானம்) கூறினர்.

அதற்கு நபி இப்ராஹீம் "(அப்படியானால்) உங்கள் தகப்பன், பாட்டன்மாரெல்லோரும் பட்டவர்த்தனமான வழி கேட்டில் உழன்று கிடந்தார்களென்பதில் சந்தேகமில்லை" என்று (மறுத்துக்) கூறினர். அதன்மேல், (அவர்களெல்லோரும் அதிருப்தி யடைந்து) "ஓ, நீ எங்களுக்கு சத்திய மொழியை (கொண்டு வந்து) கூறுகிறாயா? அல்லது பரிகாசம் செய்கின்றாயா?" என்று கேட்டனர். அதற்கு இப்ராஹீம் (நபி) "நான் சொல்வது பரிகாசமல்ல; சத்திய மொழியாகும்; மேலும் (உண்மை யாதெனின்:) உங்களுடைய (வாஸ்தவமான) தெய்வம், அந்த வானத்துக்கும் இந்த பூமிக்கும் உடையவனாகிய ஏக பரம் பொருள் (அல்லாஹ்)தான்; அவனே, (சுயமாக) இவைகளை சிருஷ்டித்தான். நான் அவனுக்கு சாக்ஷியம் கூறுபவனாக இருக்கின்றேன்" (என்று பதில் கூறினர்.) அவர்கள் போன பின் தமக்குள் மேலும் "ஏக இறைவன் மீது ஆணையாக: நீங்கள் முதுகு திரும்பிப் போய்விடுகிறீர்கள்; சரி, நீங்கள் போன பிறகு நான் உங்கள் விக்கிரஹச் சிலைகளோடு ஒரு (சதிக்) காரியம் செய்யப்போகிறேன்" என்று கூறிக் கொண்டார்.

அவ்வாறே, (அந்த விக்கிரஹத் தொழும்பர்கள், அப்பால் சென்று மறைந்த பின், இப்ராஹீம் நபிக்கு நல்லோர் சந்தர்ப்பம் கிடைத்தது.) அவர் உள்ளே சென்று (கோடாரியினால்) (சிறு) விக்கிரஹங்களை யெல்லாம் (சுக்கல் சுக்கலாக) உடைத்தெறிந்தார். ஆனால், அவைகளில் பெரிய (விக்கிரஹத்)தை மாத்திரம் விட்டு வைத்தார். ஏனெனின், அவர்கள் வந்தால், இதைப் பற்றிய உண்மையை (ஆராய்ந்து) தெரிந்து கொள்ளட்டும் என்று!

(மறுநாள் இப்ராஹீம் நபியின் தந்தையும் மற்றவர்களும் வந்து) தங்கள் விக்கிரஹங்களின் சின்ன பின்னமான நிலைமையைக் கண்டனர்; (திடுக்கிட்டனர்) "யார் அவன், (எங்கள் தெய்வங்களுடன்) இம்மாதிரியான துஷ்டச் செயல் செய்தவன்; அவன் மகா அக்கிரமக்காரனாவான்" என்று (தமக்குள் பரபரப்புடன்) கேட்டுக் கொண்டனர். அப்போது சில ஜனங்கள் (முன் வந்து) "இப்ராஹீம் என்ற வாலிபப் பேர்வழி ஒருவனைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம்; அவன் நம் தெய்வச் சிலைகளைப் பற்றி தூஷணை செய்து கொண்டிருந்தானாம். (ஒரு வேளை இது) அவனுடைய வேலையாகத் தான் இருக்க வேண்டும்" என்று கூறினார்கள். விக்கிரஹப் பூஜாரிகள் (முக்கியஸ்தர்கள் முன்வந்து) "அப்படியானால் அவனை, (இப்போதே) எல்லோர் முன்னிலையிலும் கொண்டு வந்து நிறுத்துங்கள்; (இந்தச் சம்பவம் பற்றி) அவன் தன் சாக்ஷியத்தை கூறட்டும்" என்று கட்டளை யிட்டனர்.

(அவ்வாறே சபையின் முன் இப்ராஹீம் நபி பகிரங்கமாய் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்.) அப்போது அந்த (முக்கியப்) பேர்வழிகள் (இப்ராஹீம் நபியை நோக்கி) "ஏ இப்ராஹீமே, நீதான் எங்கள் தெய்வச் சிலைகளுடன் இந்த மாதிரி (தகாத காரியம்) செய்திருக்கின்றாய்? (என்று குற்றம் சாட்டுகிறோம்; இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?") என்று கேட்டனர். அதற்கு இப்ராஹீம், "இதோ இந்த விக்கிரஹங்களில் மிகப் பெரிய சுவாமியாய் நின்று கொண்டிருக்கிறதே (அதுதான் மகா சக்தி வாய்ந்ததென்று பூஜிக்கிறீர்களே) அதனிடமே கேட்டுப் பாருங்கள்" என்று பதில் சொன்னார். (இந்த சிக்கலான மொழியைக் கேட்டு,) அந்த ஜனங்கள் மனக் குழப்பமடைந்தனர். (தங்கள் பெரிய சுவாமியைப் பார்த்து) "ஓ, தாங்களாகவா இந்த அக்கிரமம் செய்து விட்டீர்கள்?" என்று கூறியும், பதில்வராததால், (நாணத்தால்) தலை குனிந்து கொண்டனர்.

பிறகு (அந்த பூஜாரிகளான) அவர்கள், (இப்ராஹீம் நபியை நோக்கி)" ஆம்! இது (வாய் திறந்து) பேசும் சக்தியைப் பெற்றில்லை என்பதை நீவிர் நன்கு அறிந்திருக்கின்றீர் போலும்!" என்றனர். அதற்குஇப்ராஹீம் (நபி, அந்த ஜனங்களைப் பார்த்து) "நீங்கள் (ஏக பரம் பொருளான) அல்லாஹ்வை விட்டு, (கேவலம்) பேசவும் சக்தியற்ற இந்த (செய்ப்) பொருள்களை பூஜித்துக் கொண்டிருக்கிறீர்களே; இவைகளால் (சுயமே) உங்களுக்கு ஒரு நன்மையையும் செய்ய முடிகிறதில்லையே; ஒரு தீமையையும் செய்ய முடிகிற தில்லையே!" சீ! உங்கள் மீதும் அவற்றின் மீதும், சீச்சீ! (எதற்காக) நீங்கள் (சத்தியமான) இறைவனைத் தவிர்த்து (சிலைகளை) வணங்குகிறீர்கள்? என்ன, உங்களுக்கு இத்துணை பகுத்தறிவுகூட இல்லையா? என்று (இதோபதேசம் செய்து புத்திமதி)கூறினார். (ஜுஸ்வு இக்தரப; ஸூரா அன்பியா; ருகூ: 5.)

ஔரங்கஸீப்

இது டில்லி மன்னர் ஷாஜஹான் சக்ரவர்த்தியின் புத்திர சிகாமணியாகிய ஔரங்கஸீபின் சரித்திர வரலாறு. இவர் நமது இந்திய அரசரானபடியால் இவருடைய சரிதையை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது அவசியம்.

விலை ரூ. 1—56

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

18062

பண்டைக்கால முஸ்லிம்களின் நிலைமை!

(எஸ். எம். முஹம்மது முஸ்தபா ஆலூரிய்யி)

அல்லாஹ்வின் அன்பை பெற்ற நற்மக்கள் மானிட வகுப்பிலே பண்டு தொட்டே நம் நாடுகளில் சீரும் சிறப்பாலும், நுண்ணறிவின் ஆற்றலாலும், அறிவின் திறமையாலும், செய்கையின் வினையாலும், கற்கும் திறமையாலும், உள்ளச்சத்தின் பயத்தாலும், ஒருங்கே திரண்டு ஏகனாகிய அல்லாஹுவின் சந்நிதானத்தில் மகாயுந்நதப் பதவி யடைந்தார்கள். இவர்களைப்பற்றி சரிதைகளில் குறிப்பிடுவதற்கு எண்ணித்துலையா! எழுதித்துலையா! படித்துத்துலையா! பார்த்துத் துலையா! இப்படிப்பட்ட யுன்னத ஏடாய் அமைந்திருக்கும் மகான் களின் சரிதைகளைப் புரட்டிப் பார்த்தால் அவர்களின் நல்மதிப்புரை உலகை செவ்வையாக்கும் நற்மாணிக்கமாகும். அமைதியாய் அன்பை நிலைகாட்டி சத்தியவிஸ்வாஸியாய் சமைந்தார்கள். மறுலோல நற் மணிகள் மணம்வீசும் பூவைப்போல, மலரில் வடியும் தேனைப்போல, இதழ் கொடுக்கும் தாமரைப்போல, ஒளி கொடுக்கும் சூரியனைப்போல, நன்னெறிதவறு! மேன்நெறிதவறு! சொன்னெறிதவறு! மாங்கனியின் சுவையாய்ப்போல மேதையாய் மகாயுக்நதப் பதவியடைந்தார்கள். இதனால்தான் அவர்கள் சொல்லின் பேருண்மைகள் மங்கா ஒளி விளக்காய் உலகில் விளங்குகின்றன.

இத்தவிதமான நற்கூற்றைத்தான் நம் சகோதரர்கள் மேடைப் பிரசங்கமுதல் சிறு, சிறுவர்கள்வரை இந்நிகழ்ச்சிகள் நாளடைவில் நடைபெற்று வருகின்றன. மேலும் நடைபெறும் என்பதில் சந்தேகம் அன்று. பேராண்டுகட்கு முன்பு இந்தியாவில் ஒருங்கே திரண்டு வற்றுபேர் மதியாய் மா! பேரரசராய் உலகிற்கு ஒளித்து காட்டிய மா! பரம்பரை மதியரசர் அவர். மொகலாய வம்சத்தின் நீதிவாய்ந்த நிதி மன்னனாய் இறையாகிய அல்லாஹுவின் திருவடியானாய் விளங்கிய ஔரங்கசீப் சக்கரவர்த்தியின் சரிதை பண்டை இஸ்லாமிய சரித்திர புகழ்பெற்ற ஒன்றாகும். அவர்களின் பொன்னான சரிதை மன்மத ஏட்டில் புகழ்ந்து எழுதப்பட்டிருக்கின்றன. உலகத்திலுண்டான சிறப்புற்ற மேதைகளில் அவர்களும் ஒன்றாகும். சுமார் ஐந்நூறு ஆண்டுகட்கு முன்புள்ள இப்பெரியார்தாம் யுத்தம் செய்துக்கொண் டிருக்கும் நேரத்தில் தொழுகையின் நேரத்தில் தொழுகையைப் பிற் படுத்தாமல் சமையா சமையத்தில் நடத்தினார்கள். தள்ளாத நுந்தி நடக்கும் முதியவயதின் பருவத்திலே வாளேந்தி தன் எதிரிகளை விரட்டியடித்து மாபுகழ்பெற்றார் மதிகீர்த்தி மன்னர் ஔரங்கசீப். இதுமட்டுமா! அன்று இதைப்போன்ற பல்லாயிரக்கணக்கான நற் குணங்களமைந்த நற் ஓர்! புதையலாகும். அவர்களின் ஜீவியத்தில்

ஓர் கீர்த்திவாய்ந்த சக்கரவர்த்தியானர்கள். இன்னும் அவர்களின் புகழ்பற்றி எடுத்துரைக்க இயலா! பல மாடியுள்ள மாளிகையில் வாழும் மனிதனும், சிறு குடிசையில் வாழும் சீரான ஏழையும் அலைந்து திரிந்து அல்லும் பகலும் தன் உழைப்பால் உழைத்து ஊதியம் தேடும் தொழிலாளியும், காட்டிற் சென்று ஏர் பிடித்து மண் உழுது வளமிட்டு வளர்செடியை நன்றாய் வளர்த்து ஊதியத்தை கொய் தெடுக்கும் ஊழியனுகிய சேவைபுரியும் விவசாயியும், பஞ்சமாபாதகச் செயல்களைச் செய்து அல்லாஹுவின் வேதனைக்குட்பட்டு வறுமை வாட்டத்தால் பசியாலும், பட்டினியாலும், காதால் கேட்கமுடியா! கண்ணுல் நோக்க முடியா! உடுக்ககந்தையன்றி வேறு துணியின் மகிழ்வை கண்டு கொள்ள முடியாத எழியவரும், உலகிற்கு பணிபுரியும் பாட்டாளியின் தொண்டர்களும், அந்த அந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கும் மாந்தரெல்லாம் ஒன்றே! எல்லாம் அல்லாஹ்வால் படைக்கப்பட்டதே! இப்படிப்பட்ட எல்லாவித நல்லவற்றை யுணர்ந்து மனிதன் சமூத்துவன் உடையவன்தான் என்றெண்ணி ஏழைபரம்பிலே வாழ்ந்தார் மதிமன்னர் ஔரங்கஜீப். தாமும் பிறரும் ஒன்றேதான் என நினைத்து அல்லாஹுவின் சொல்லை யூன்றிப்பிடித்தார் மா! கோ! மன்னர் ஔரங்கஜீப். தன் வாழ்க்கைக்கு பொதுஜன சொத்தில் வசூல் செய்யாது தன்னுழைப்பால் தாம் பொருட்திரட்டி அல்லாஹுவின் ஏவலை எடுத்து நடக்க வேண்டுமென்று அச்சுவாகனம் கிடையா! அக்காலையிலே அச்சுவாகனமாய் தன் கைவிரலின் மூலமாய் ஊன்றி எட்டுச்சுமை எழுதினர் திரு மன்னர் ஔரங்கஜீப். ஊண், உறக்கம், மெய்பாராது கண்சடைய, கால்சடைய இவ்வித இடைஞ்சல் கட்குட்பட்டு அஞ்சா நெஞ்சமாய், பயபக்தியாய் திருவேதமாகிய திருக்குர்ஆனை எழுதி அதைவிற்று அதன் மூலம் வருவாயடைந்து தன்மேனியின் அங்கத்தினர்கட்கும் தன்மேனியின் சினேகிதர்கட்கும் தனக்கும், ஏழை எளியவர்கட்கு ஈந்தும் உண்டுவாழ்ந்தார். மார்க்கத்தில் ஹராமாக்கப்பட்ட ஆடல், பாடல்களை வெறுத்து ஷரீஅத் திட்டத்தின் படி ஆட்சி நடத்தினர் ஆட்ச்சி மன்னர் ஔரங்கசீப்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக ஹதீஸ் மஜ்லிஸ்களை ஏற்படுத்தினர். இவ்வாறு மட்டுமா! இல்லை பல்வாறாய நல்லவற்றை எடுத்தார்; தீயவற்றை விலக்கினர். அறம், ஈகை, ஒற்றுமை, சமாதானம் இவைகட்காக பெரிதும் பாடுபட்டார். அனியாயக்காரனின் கொடும் விரோதியானர்கள். தெய்வ வழி பாட்டின் சகோதரனாய் சமைந்தார்கள். நூற்றுக்கணக்கான மக்களை சீர்திருத்தும் பொருட்டு நல்ல விதமான நற்கூற்றுகளை யுண்டு பண்ணினர். நாட்டின் கிளர்ச்சிகளை அடக்கி நாட்டின் அமைதிகளை நிலைநாட்டினர். இப்படிப்பட்ட சிரோண்மணிகளின் சரிதைகளைப் புரட்டிப்பார்த்து நாட்டுமக்கள் (முஸ்லிம்கள்) முன்னேற வேண்டும் இப்படிப்பட்ட சிரோன்மணிகளின் மேன்மைப்பதவியை எடுத்துரைக்க இயலுமோ!

உடல் அமைப்பின் தத்துவம்.

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

இரண்டு இனங்கள் இணைந்து சேர்வது, இயற்கை தர்மத்தின் பிரகாரம் ஓர் அத்தியாவசியமான காரியமாகும். இப்படிச் செய்வது அந்த இனத்தின் ஆரோக்கியத்துக்கும் ஜீவியம் நிலைத்திருப்பதற்கும் மிகவும் அவசியமானதாகும். இரண்டு இனங்கள் இணைந்து சேர்வ தால் மூன்றாவது ஜீவன் ஒன்று உற்பத்தியாகிறது. இது உயிர் உள்ள ஜீவன்கள்—பிராணிகள்—தாவரங்கள் முதலிய எல்லா சிருஷ்டி இனங் களுக்கும் பொதுவான அம்சமாகும்.

ஆண்—பெண் உடல் அமைப்புத் தத்துவங்களைப் பற்றி, இக்காலை நம் வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும், உண்மைகளைப் பெரியோர் எடுத்துக்கூறி விளக்குவதில்லை. சிறுவர்களும் சிறுமிகளும், இந்தத் தத்துவங்களை, இயற்கையாகவே தெரிந்துகொள்ள வேண்டுமென்று விழைகிறார்கள். ஆனால் பெரியோர்கள் அந்த ஆராய்ச்சி வழியில் செல்லாதபடி, தடுத்து விடுகிறார்கள்; இதனால் வாலிபர்களும் யுவதி களும், உண்மைகளைத் தெரிந்து கொள்ள வழியில்லாமல், தவறான விஷயங்களைத் தாறுமாறாகக் கேள்விப்பட்டு ஏதேதோ நம்பிவிடுகி றார்கள். சில சமயம் தவறான வழிகளில் சென்று, ஒழுக்கம் கெட்டுப் போகிறார்கள்.

யுவர்களுக்கும் யுவதிகளுக்கும், பகிரங்கமான முறையில், ஆண் பெண் உடல் அமைப்புத் தத்துவம் கற்றுக் கொடுக்காததினால், பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் தம்முடன் இருக்கும் தோழர்களின் பேச்சுக்களைக் கொண்டும், வீட்டில் வேலைக்காரிகளின் பேச்சுக்களைக் கொண்டும் அல்லது தகாத நண்பர்களின் பேச்சுக்களைக் கொண்டும், செயல்களைக் கொண்டும் தவறான விஷயங்களைத் தங்கள் இளம் மனதில் பதிய வைத்துக் கொள்கிறார்கள்.

பெரும் பாலான பெற்றோர், தம் பிள்ளைகள் இப்படிப்பட்ட கேள்வி கேட்டால், சரியானபடி பதில் சொல்லி விளக்காமல், அவர்களை மிரட்டி விடுகின்றனர். பிள்ளைகள் இப்படி கேள்வி கேட்பதும் தெரிந்துக்கொள்ள வேண்டியதும் இயற்கையின் தூண்டுதலாகும். அவர்களை அடக்கி அமுக்கிவைத்து விடுவது நல்லதல்ல. இதனால் கெட்டுப்போய் விடுகிறார்கள் அநேக பிள்ளைகள்.

ஆகையால், வயதுக்கு வந்து கொண்டிருக்கும் வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும், ஆண்—பெண் உடல் அமைப்புத் தத்துவங்களையும் அது சம்பந்தமான விஷயங்களையும், லஜ்ஜையில்லாமல் கற்றுக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள், தவருன ஆராய்ச்சி களில் கெட்டுழலாமல் இருப்பதோடு, இயற்கையில் தத்துவங்களையும் இறைவனுடைய சிருஷ்டிப்பின் பெருமைகளையும் தெரிந்து கொள் வார்கள்.

இந்த கற்கருத்தும் கல்வி அபிவிருத்தியின் லட்சியமும் கொண்டே, நான் இச்சிறு நூலில் ஆண்பெண் உடல் அமைப்புத் தத் தத்துவங்களை, உர்தூ மொழியின் உதவிகொண்டு, டில்லி யூனனி ஹக்கிம்—டாக்டர்களின் கருத்துரைகளைக் கொண்டு, இங்கு சுருக்க மாக எடுத்துரைத்துள்ளேன். இதனைப் பெரியோர்களும் படித்து அறிவதோடு, வயதுக்குவந்து கொண்டிருக்கும் வாலிபர்—யுவதிகளுக் கும், அவரவர் அறிவாராய்ச்சிக் கேற்ப கற்பித்துக் கொடுத்து, அவர் களை வருங்காலப் புருஷர்களாகவும், பெண்களாகவும் ஆக்கிவைப்பார் களாக.

(1) ஜீவன் உற்பத்தியாவது எப்படி?

ஒவ்வொரு உயிருள்ள ஜீவனும் முதன் முதல் ஒரு சிறு சிசு (அல்லது குஞ்சு—குட்டி) ஆகவே உற்பத்தியாகிறது. அதிலிருந்து அது வளர்ந்துப் பெரியதாகிறது; பெரிதாகி ஒரு குறிப்பிட்ட காலம் (ஆயுள்) வரை, ஜீவித்திருக்கிறது. எந்த குஞ்சு, குட்டி, குழந்தைக் கும் ஒரு தாய்—தந்தை கட்டாயம் உண்டு.

வீட்டில் வளர்க்கப்படும் நாய், பூனை, கோழி முதலியவைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள்: நேற்று தனியே உலாவிக் கொண்டிருந்த பூனைக்கு, இன்று ஒன்றிரண்டு குட்டிகள் கிடைத்துவிட்டனவே, அவை எப்படி உண்டாய் விட்டன? இதே விதமாய் கோழி முட்டை யிடுகிறது. ஆடு, மாடு குதிரை எல்லாம் குட்டிபோடுகின்றன. நம் தாய் சின்னஞ்சிறு குழந்தையை (ஒரு பாப்பாவை) பெற்றெடுக்கிருள்.

இவ்வாறே, தண்ணீரில் வாழும் மீன், தரையில் வாழும் நாலு கால் பிராணிகள், ஆகாயத்தில் பறக்கும் பட்சிகள் எல்லாமே, முட்டை யிட்டோ குட்டி போட்டோ பிள்ளைப் பெற்ருே தமது இனத்தை உல கில் விருத்தி செய்கின்றன. இவை மட்டும் அல்ல. மரஞ்செடி கொடிகள்கூட, ஒன்ருேடொன்று இணைந்து, பூத்துக் காய்த்து, முளைத்து இனவிருத்தி செய்து பெருகி வருகின்றன.

இதையெலலாம் நாம் ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டாமா? இரண்டு இனம் எப்படி இணைகின்றன? ஆணும் பெண்ணும் எப்படி கூடுகின்றனர்? சிசு, குஞ்சு, குழந்தை எப்படி பிறக்கிறது? இதை அறிய வேண்டியது அவசியம்.

பள்ளிக்கூடங்களிலும், கலா சாலேகளிலும், பிள்ளேகளுக்கு என்னென்னமோ கற்றுக் கொடுக்கிருர்கள். ஆனல் குழந்தை எப்படி உற்பத்தியாகிறது, எப்படி பிறந்து வெளி வருகிறது-என்பதை கற்பித்துக் கொடுப்பதில்லே. பிள்ளேகள் அப்படி கேள்வி கேட்டாலும், 'அது ஆபாசம்' என்று சொல்லி வாயை அடைத்து விடுகின்றனர். எனவே, அந்த 'ஆபாசம்' என்ன அது என்று, ரகசியமாய் ஆராய்ந்தறிந்து தவருன விஷயங்களே நம்பி விடுகின்றனர் நம் பிள்ளேகள்.

'ஆண் இனமும், பெண் இனமும் சேருவதால் சிசு என்னும் குழந்தை பிறக்கிறது' என்று சொல்லிக் கொடுத்து விட்டால், என்ன முழுகிப் போய்விடும்?

(2) இன்ப உணர்ச்சியும், இனச் சேர்க்கையும்

உயிர் வாழ்வதற்காக, எல்லா ஜீவ ஜந்துக்களும் இரை உண்ணுகின்றன; மனிதர் உணவு புசிக்கிருர்கள். இப்படி ஆகாரம் உண்டு, உடலே வளர்த்தால்தான் ஆரோக்யமும் நீண்ட ஆயுளும் பெற்று உலகில் வாழமுடியும். இது ஒருவகை இன்பமாகும்.

இதேபோல், ஒரு இனம் இன்னெரு இனத்துடன் இணைந்து, உடல் சேர்த்து, இன்பம் அனுபவித்து இனத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டியது ஒருவகை வாழ்க்கை லட்சியம்தான். ஒன்றிலிருந்து ஒன்று உண்டாக வேண்டியது உலகத்தின் அபிவிருத்திக்கு அவசியமாகும். ஒரு ரோஜாப்பூ செடியின் கிளேயை வெட்டி மண்ணில் புதைத்தால் அதுவும் ஒரு செடியாய் விடுகிறது. ஆல மரத்து விழுது பூமியில் தாழ்ந்து மண்ணேப் பிடித்துக் கொண்டு அதுவும் மரமாய் விடுகிறது. இதெல்லாம் இயற்கைச் சேர்க்கையும் உற்பத்தி முறையும் ஆகும்.

ஆனல் மனிதர் இனத்தின் உற்பத்தி மரஞ் செடி உற்பத்தி போன்றதல்ல. ஆண் உடலிலிருந்து வெளிவரும் ஒரு வஸ்துவை பெண் உடலிலுள்ள ஒரு வஸ்துவுடன் சேர்க்க விட்டால், அந்த இரண்டு வஸ்துக்களும் சேர்ந்து இணைந்து உருமாறி, மனித உருவமுடையதாய் பரிணமித்து, ஒரு சிறு குழந்தையாய் விடுகிறது.

தண்ணீரில் கண்ணுக்கு எளிதில் புலப்படாத சிறுசிறு கிருமிகள் நெளிவதை நீங்கள் கூர்ந்து பார்க்க முடியும். அப்படிப்பட்ட ஒரு வகைக் கிருமி, ஆண்களுடைய இந்திரியம் என்னும் நீரில் நெளிந்து கொண்டு இருக்கும். அந்தக் கிருமிகளேப் போல், பெண்ணுடைய கர்ப்பாஸயத்திலிருந்து வெளிவரும் நாதம் என்னும் நீரில் நெளிந்து கொண்டிருக்கும். இரண்டு பேர்களுடைய உடல் சேர்க்கையால், அந்த இரண்டு இனக் கிருமிகளும் சேர்ந்து கொண்டு விட்டால், அவை ஒன்ருேடொன்று இணைந்து சேர்ந்து கொஞ்ச நாளில் சிசுவாகி விடுகின்றது.

மனிதர் இனம் பெருகுவதற்கு இங்ஙனம் ஆணும் பெண்ணும் சேர்ந்தே ஆகவேண்டும். இப்படி சேர்வதில், இயற்கையாக ஒரு இன்பத்தையும் இறைவன் அளித்துள்ளான்.

(3) தாவரங்களில் ஆண்-பெண் சேர்க்கை உண்டு

புஷ்பங்கள் உண்டாகும் தாவரங்கள் (செடி, கொடிகள்), வித்துக்களிலிருந்து உற்பத்தியாகின்றன. அவை வளர்ந்து பெரிதானபின் புஷ்பிக்கின்றனவே அந்தப் புஷ்பங்களிலிருந்து ஏராளமான வித்துக்கள் (பீஜங்கள்) உண்டாகின்றன. அந்த பீஜங்களை ஈரமுள்ள பூமியில் போட்டால் முளை விட்டுச் செடி உண்டாய்விடுகிறது.

செடி கொடிகளில் உண்டாகும் புஷ்பங்களில் இரண்டு வகை உண்டு: 1. ஆண் புஷ்பம், 2. பெண் புஷ்பம். ஆண் புஷ்பங்கள் ஒருவகை மகரந்தப் பொடி உண்டாகிறது. அந்தப் புஷ்பம் முதிர்ந்து விட்டால், மகரந்தப் பொடி உதிர்கிறது. அதை காற்று அடித்து எடுத்துப்போய், பக்கத்திலுள்ள பெண் புஷ்பத்தின் இதழ்களினுள் போடுகிறது. அந்த இதழிலுள்ள பிசுபிசுப்பு, அந்தப் பொடியை பற்றிக்கொண்டு விடுகிறது. எனவே அதிலிருந்து மகரந்தப் பொடி முற்றி பீஜங்களாக (விதைகளாக) வெளிப்படுகின்றன.

தாவரச் செடிகளின் சேர்க்கைகளில் இது ஒருவகை. மற்றொரு வகையும் உண்டு. அதாவது: தேன் ஈக்களின் உதவியால், தாவரங்களுள் சேர்க்கை (இணைதல்) உண்டாகிறது. எப்படி யெனின், தேன் ஈயானது தேனை உண்பதற்காக, கிளைக்குக்கிளை-புஷ்பத்துக்குப் புஷ்பம் அமர்ந்துப் பாய்ந்து செல்கிறது. முதலில் ஆண் புஷ்பத்தில் உட்காரும் போது, நுண்ணிய மகரந்தப் பொடி அதன் கால்களில் ஒட்டிக் கொள்கிறது. அது அப்படியே பறந்துப்போய் பெண் புஷ்பத்தின் மத்தியில் அமர்ந்ததும், பெண் புஷ்பத்தின் பசை இந்த மகரந்தப் பொடியை தன்னில் ஈர்த்து இணைத்துக் கொள்கிறது. இதனால் பீஜம் உற்பத்தியாகிறது.

சில சமயங்களில் பூங்கொடி, பூஞ் செடிகளின் மீது காற்று அடிக்கும்போது கிளைகள் ஒன்றோடொன்று பட்டு ஆடி, உரசி அணைகின்றன வல்லவா? அதனாலும் அவற்றின் இனச் சேர்க்கை உண்டாய் விடுகிறது.

சுருங்கக் கூறுமிடத்து, ஆண் புஷ்பமும் உண்டு, பெண் புஷ்பமும் உண்டு. இயற்கை முறையில் அவைகளில் இன்பச் சேர்க்கையுமுண்டு, இன விருத்தியும் உண்டு.

(4) மீன், தவளை இனங்களிலும் சேர்க்கை உண்டு.

பொதுவாக மீன்களில் ஆண் மீன்கள் வேறு, பெண் மீன்கள் வேறு உண்டு; தவளைகளிலும் ஆண் வேறு, பெண் வேறு, உண்டு. தவளைகள் ஒன்றோடொன்று கட்டிக் குதித்துச் செல்வதை நீங்கள்

பார்த்திருக்கலாம். அங்ஙனம் அவை சேருகின்றன. ஆனால், மீன்கள் இனம் சேருவதை, சாதாரணமாக யாரும் ஆராய்ந்துப் பார்ப்பதில்லே;

மனிதர்களைத் தவிர மற்ற உயிர்ப் பிராணிகளுக்கு, ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட தவணைகளில்தான், இனச் சேர்க்கைக் குரிய உணர்ச்சி உண்டாகும். அப்போது மட்டுமே அவை இனச் சேர்க்கையில் ஈடுபடும். அப்புறம் அவை சாதாரணமாகவே உயிர் வாழ்ந்துத் திரியும்.

மீன்களும் தவளைகளும், சூல் என்னும் கர்ப்பச் சினையை ஏற்றுக் கொண்ட பின், குறிப்பிட்ட நாட்களில் அவை தண்ணீரிலேயே முட்டை யிடுகின்றன. அந்த முட்டைகள் தண்ணீரில் அழுகியோ, கெட்டோ போவதில்லை. வெய்யிலின் உஷ்ணத்தால் மீன்—தவளைகளின் முட்டைகள், பக்குவம் அடைந்து வெடித்து சிறுசிறு குஞ்சுகளாக வெளிவந்து, உடனே தண்ணீரில் நீந்தத் தொடங்குகின்றன.

குஞ்சுகளாக வெளிவந்த பின், தவளையின் குஞ்சுகளுக்கும் மீன் குஞ்சுகளுக்கும் தாயின் உதவி தேவையில்லை. சுயமாகவே அவை நீந்தி, உலாவி, உணவு கிரஹித்து உண்டு பெருகி, வளர்கின்றன. மீன் குஞ்சுகள் தண்ணீரிலேயே சதா இருந்து வாழ்வதனால், அவைகளுக்கு சாதாரணமாக வெளி ஆபத்துக்கள் நேரிடுவதில்லை. ஆனால், தவளைக் குஞ்சுகளின்நிலை அப்படி யில்லை. அவை முதலில் 'தலைப் பறட்டை' என்ற குஞ்சுகளா யிருக்கும் வரை தண்ணீரிலேயே இருக்கின்றன. சில தினங்களில் கொஞ்சம் பெரிதானதும் அதன் வால் நீங்கி, கால்கள் உற்பத்தியாகின்றன. கால் கரம் உற்பத்தியானதும் அவை தண்ணீரை விட்டுத் தரையில் குதித்துச் செல்கின்றன. அப்போது மனிதர் கால்களில் மிதிப்பட்டும், காக்கை குருவிகளால் கொத்தப்பட்டும் பெரும்பான்மை அழிகின்றன.

தவளைகளில் பலவகை உண்டு, தரையில் வாழ்வதையும், தண்ணீரை விட்டு வெளிவராதவையும் உண்டு. இவை எல்லாம் சிருஷ்டி கர்த்தாவின் திறமையை விளக்குகின்றன.

(தொடரும்)

18062

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

காஜா நிஜாமுத்தீன் அவ்லியா ஜீவிய சரித்திரம்

நம் பாரத தேசத்தின் தலை நகராகிய டில்லி (தெஹ்லீ) மாநகரத்தில் அடங்கி யிருக்கும் சுல்தானுல் மஷாயிக், க்வாஜா, நிஜாமுத்தீன் அவ்லியா (குத்திஸ ஸிர்ருஹு) அவர்களின் மகாத்மியம் மகத்தானது. முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதார் களுங் கூட, ஆண்டுதோறும், நிஜாமுத்தீன் 'தர்காஹ்' வுக்கு விஜயம் செய்து நற்பயன் அடைந்து செல்கிறார்கள்.

இத்தகைய மகானின் பிறப்பு, படிப்பு, பயிற்சி, தியானம், வணக்கம், சத்திய போதனை, நற் பிரசாரம், போராட்டம், வெற்றி முதலிய விஷயங்கள் சுருக்கமாகவும் விளக்கமாகவு முள்ள ஜீவிய சரித்திரம் இது. ஒவ்வொருவரும் படித்துணர வேண்டிய ஞான நூல். இதன் விலை நயா பைசா. 56

மி:ஃருஜுல் ஆரிபின் பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்

(புதிய பதிப்பு)

"மி:ஃருஜுல் ஆரிபீன்" என்பது பதினான்கு இல்முகளுக் கும் ஓர் அலைகடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமத் துல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சியமான 'மின்ஹாஜில் ஆபிதீன்' என்னும் கிரந்தத்தி லிருந்து வெகு நுட்பா நுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கி யிருக்கும் 'மஃரிபா' என்னும் தீட்சை ஞானத்தின் பாகுபாடு களையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப் பியாச முறைகளையும் பற்றி விவரித் தெழுத வேண்டுமானால் எவ்வளவு நீடித் தெழுதினாலும் முடியாது. கோட்டமிட்ட நண்பர்களுக்கே இதன் அருமை விளங்கும். சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு ரூ. 4

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

லண்டன் சாமார்த்தியத் திருடர்கள்

(முதற் பாகம்)

இதிலுள்ள ஒவ்வொரு கதைகளும் படிக்கப் படிக்க ஆனந்தமா யிருக்கும். லண்டன் திருடர்கள் மகா சாமர்த்திய மாகச் செய்யும் பற்பல வித மோசங்களும், அந்த மோசங்களைப் பற்பல விதமான உபாயங்களால் கண்டு பிடிக்கும் ஹண்டர் (Hunter) என்னும் ஒரு போலீஸ் வீரனது புத்திசாலித் தனமும் இந்நூலில் மிக அருமையாக விளக்கப்பட்டிருக் கிறது. இந்நூலைப் படிப்பதால் ஒவ்வொருவரும் கொலை களவு முதலிய மோசங்களைக் கண்டு பிடிப்பதற்கான பல உபாயங்களை அறிந்து கொள்ளலாம். மேலும், ஒரு மனி தனைக் கண்டவுடன் அவன் எப்படிப்பட்டவன்? என்ன தொழிலை யுடையவன்? என்ன குணமுடையவன்? என்பதை அறிந்து கொள்ளும் வழிகளும் இதில் கூறப்பட்டிருக்கின்றது.

இந்நூல் யாவருக்குமே பயன்படக் கூடியதாகும். முக்கியமாய் போலீஸ் உத்தியோகத்தி லுள்ளவர்களுக்கு பெரிதும் பயன்படக் கூடியதாய் இருக்கும். சுருங்கச் சொல் லின் இந்நூலைப் படிக்க ஆரம்பித்தால் முழுவதும் படித்து முடிக்கும் வரையில் இடையில் நிறுத்த மனம் வராது.

முதற்பாகம் விலை ரூ. 2-00

ஸப்அ ஸனுபில்

(ஹனபி மதுஹபுக்குரியது)

இந்த புஸ்தகத்தில் ஏழு புஸ்தகங்கள் அடங்கி யிருக் கின்றன. அவைகள்: (1) ஜருருல் மூமினீன் (2) ஜருருல் முஸ்லிமீன் (3) ஜருருல் முஸல்லீன் (4) ஜருருஸ் ஸாயிமீன் (5) ஜருருல் முஜக்கின் (6) ஜருருல் ஹாஜ்ஜீன் (7) ஜருருத் தாயீன்.

இத்துடன் அம்மயத் ஜுஸு, ஈடேற்ற மாலை இவை களும் ஞான ரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திருமெஞ்ஞான சரநூல், ஞான கடனம் இவைகளும் சேர்ந் திருக்கின்றன.

விலை ரூ. 3-00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.